விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 04 ஞாயிற்றுக்கிழமை (20.09.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 275




# மனித உரிமை மீறல்களை கண்டறிய சுயாதீன விசாரணைகள் அவசியம்

## ஐ.நாவின் அறிக்கையில் வலியுறுத்தல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின்போது படையினரால் மேற்கொள்ளப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பக்கசார்பற்ற சுயாதீனமான விசாரணை ஒன்று முழுமையாக நடத்தப்படவேண்டும் என்று இலங்கை அரசுக்கு உறுதியாக கூறியுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகளுக்கான ஐ.நாவின் பிரதிநிதி வருகிறார்

(கொழும்பு)

இடம்பெயர்ந்த மக்களின் மனித உரிமைகளுக்கான ஐ.நா.பிரதிநிதி வோல்டர் கெலின் எதிர்வரும் 23ஆம் திகதி இலங்கை வரவுள்ளார். அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் அழைப்பின் பேரில் அவர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்கிறார் என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கடந்த வாரம் ஜெனீவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடரின் போது வோல்டர் கெலினை இலங்கைக்கு பயணம் மேற் கொள்ளுமாறு அமைச்சர் மகிந்த சமரசிங்க அழைப்பு விடுத்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பயணத்தின் போது அரசின் உயர் அதிகாரிகளை குறிப்பாக ஜனாதிபதியின் ஆலோசகரும் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான (16ஆம் பக்கம் பார்க்க)

# மேல்மாகாணத்தை குழப்ப விடுதலைப் புலிகள் முயற்சி!

## இராணுவம் எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் எஞ்சியிருக்கும் விடுதலைப் புலி உறுப்பினர்கள் மேல் மாகாணத்தில் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சித்து வருவதாக தெரிவித்திருக்கும் படைத்தலைமையகம், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கும் தரைப்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகளுக்கு சிறப்பு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றது. இது தொடர்பாக (02ஆம் பக்கம் பார்க்க)

## கப்டன் டி.ஏ.குணசிங்கம் நேற்றுக் காலமானார்



உதைபந்தாட்ட யாழ். மத்தியஸ்தர் சங்கத் தலைவரும் பிரபல உதைபந்தாட்ட முன்னாள் வீரரும் வலம்புரியின் செய்தியாளருமான கப்டன் டி.ஏ.குணசிங்கம் (வயது 81) நேற்றுக் காலை காலமானார்.

நோய் வாய்ப்பட்டிருந்த அவர் சிகிச்சைக்காக வைத் (16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்புக் கண்காட்சியில் புலிகளிடம் மீட்ட ஆயுதங்கள்

(கொழும்பு)

படையினரால் கைப்பற்றப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் கொழும்பில் சிங்கள மக்களின் பார்வைக்கு வைக்கப்பட உள்ளன. தரைப்படையின் 60ஆவது ஆண்டு நிறைவு நாளையொட்டி பண்டாரநாயக்க' நினைவான அனைத்துலக மண்டபத்தில் ஒக்ரோபர் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 23ஆம் திகதி வரையில் புலிகளின் ஆயுதங்கள் காட்சிப்படுத்தப்பட உள்ளன.

தரைப்படையின் தலைமை கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மெண்டக சமரசிங்க நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

தரைப்படையின் 60ஆவது ஆண்டு விழா பல (02ஆம் பக்கம் பார்க்க)

## சனல்-4க்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசு சட்ட ஆலோசனை!

(கொழும்பு)

படையினரால் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவது போன்ற காட்சிகள் அடங்கிய வீடியோவை வெளியிட்டதற்காக சனல்-4 நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பான ஆலோ சனையில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

லண்டன் சென்றுள்ள சட்டமா அதிபர் மொஹறான் பீரிஸ், அங்குள்ள பிரபல சட்டவாளர்களுடன் இது தொடர்பில் ஆலோசனைகளை நடத்தியுள்ளார்.

இந்த சட்ட நடவடிக்கைளுக்கென பிரித்தானியாவை சேர்ந்த சட்டவாளர் குழு ஒன்றை இலங்கை அரசு நியமித்துள்ளது. அந்தக் குழுவுக்கு பிரித்தானிய ராணியின் மூத்த சட்டவாளர் ஒருவர் தலைமை தாங்கு வார் என சட்டமா அதிபர் தெரிவித்தார்.

அந்த வீடியோ (16ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலைக் குற்றவாளி சாகும்வரை உண்ணாவிரதம்

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை தொடர்பில் 19 வருடங்களாக சிறைத்தண்டனை அனுபவித்துவரும் இலங்கையரான கே.பி.றொபேட் பியாஸ் தன்னை விடுவிக்க வேண்டும் எனக் கோரி உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை முதல் அவர் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 19 வருடங்களாக (16ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட 534 பேர் நேற்று யாழ். வந்தனர்

### பொதுமக்கள் தீவுப்பகுதியைச் சேர்ந்தவர்கள்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த தீவகத்தைச் சேர்ந்த 500 பொதுமக்கள் மற்றும் 34 யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். இது தொடர்பில் யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்ததாவது;

வவுனியா (16ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையின் முதற் தர SINGER தொலைக்காட்சிகள்

தற்போது விசேட சலுகைகளுடன் யாழ் மக்களுக்காக

www.singersl.com

எந்த மாதிரியிலுமாலான உங்கள் பழைய தொலைக்காட்சிக்கு விலைக்கழிவுடன் புத்தம் புதிய தொலைக்காட்சி

விசேட விலைக்கழிவு

திருப்தி இன்றேல் பணத்தினை மீளப்பெறும் வாய்ப்பு

கிளைகள்: யாழ்ப்பாணம் | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி

SINGER Plus
MORE BRANDS-MORE CHOICE
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

(C-3343)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வட மாகாணத்தில் ஏற்படும் அமைதி நிலை விளையாட்டுக்கு முக்கியம் கொடுத்துள்ளது

## வட மாகாண பிரதம செயலாளர் தெரிவிப்பு



ஒவ்வொரு சமூகத்திலும் நாட்டிலும் சமுதாய ரீதியாக விளையாட்டுத்துறையானது முக்கிய பங்கு வகிக்கின்றது. எனவேதான் எமது மேன்மைதங்கிய ஜனாதிபதியும் எமது நாட்டிலும் விளையாட்டுத்துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து இத் துறையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்றார் என வட மாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி தெரிவித்துள்ளார்.

வட மாகாண விளையாட்டு விழா-2009 ற்கு வழங்கிய வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வட மாகாணத்தைப் பொறுத்தவரை பல வருடங்களாக நிலவிய சூழ்நிலை காரணமாக இவ் விளையாட்டுத்துறையானது விரிவுபடுத்த முடியாமலும் வீர, வீராங்கனைகளின் திறமைகளைப் போதியளவு வெளிக் கொணர முடியாமலும் இருந்தது.

ஆனால் தற்போது வட மாகாணத்தில் ஏற்பட்டு வரும் அமைதியான சூழ்நிலையில் மக்களின் நிம்மதியான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் முக்கியமாக எமது வட மாகாண கௌரவ ஆளுநர் முழு மூச்சுடன் செயற்பட்டு வருகின்றார்.

இவ் வகையில் அவர் விளையாட்டுத் துறைக்கும் முக்கியத்துவம் வழங்கி வட மாகாணத்தின் பாடசாலைகள், கழகங்கள், அலுவலகங்கள் போன்ற பல்வேறு நிறுவனங்களிலும் பல வகையான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார்.

அதன் ஒரு கட்டமாக போர்ச் சூழலை ஓய்வுக்குப் பின்னராக முதன்முதலாக வட மாகாணத்தில் கழகங்களுக்கிடையிலான பெரும் விளையாட்டு நிகழ்வுகள் இம் மாதத்தில் யாழ். மாவட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

வட மாகாணத்தில் இலை மறைகாய்களாக இருக்கும் வீர, வீராங்கனைகளின் திறமைகளைப் பலரும் அறியச் செய்ய இது ஒரு வாய்ப்பாக அமைகின்றது.

இவ் விளையாட்டு நிகழ்வு நடைபெற வேண்டும் என முழுமூச்சுடன் இருந்து செயற்படுத்தும் எமது வட மாகாண கௌரவ ஆளுநரை நாம் இத் தருணத்தில் நன்றியுடன் நினைவு கூர வேண்டியவர்களாவோம்.

அத்துடன் இந் நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற உழைக்கும் வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வட மாகாண கல்வி அமைச்சின் விளையாட்டுப் பணிப்பாளர், உதவிப் பணிப்பாளர், யாழ்.மாவட்ட அரச அதிபர், மாவட்ட விளையாட்டு அதிகாரிகள், விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் அனைவரையும் மனமார வாழ்த்துகின்றேன். (ஏ)

## ACCA பாடத் திட்டம் மின்னஞ்சல் ஊடாக அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

ACCA கருத்தரங்கில் பங்குபற்றி பதிவு செய்த மாணவர்களுக்குரிய பாடத்திட்ட விபரங்கள் மின்னஞ்சல் ஊடாக இணைக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் Knowledge Module - F1, F2, F3 பாடப் பரப்புக்கள் உள்ளடங்குகின்றன. இதுவரை கிடைக்கப் பெறாத அல்லது பதிவு செய்யாத மாணவர்கள் இன்று JTI, இல.45, மணிக்கூட்டு வீதியில் தொடர்பு கொண்டு செயற்பாட்டு முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## 40 வருடங்களின் பின்...

இப் படத்தில் துப்பாக்கியால் சுடுபவர் வட மாகாண விளையாட்டு விழா - 2009 இன் பிரதம ஆரம்பிப்பாளர் ரி.கருணாகரன்.

சுமார் 40 வருடங்களின் பின் வட மாகாண விளையாட்டு விழாவில் மெய்வல்லுநர் போட்டிகளை துப்பாக்கியால் சுட்டு ஆரம்பித்து வைத்துள்ளார்.

இவர் இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் ஆரம்பிப்பாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இலங்கை உதைபந்தாட்டம், கரபந்தாட்டம் ஆகியவற்றின் மத்தியஸ்தர் என்பதுடன் இலங்கை உதைபந்தாட்டப் பயிற்றுவிப்பாளருமாவார்.




### வீடு விற்பனைக்கு

சித்தன்கேணி டச்சு றோட் என்னும் முகவரியில் 2 1/2 பரப்பு காணியுடன் வீடு விற் பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளும் முகவரி:

கி.ஜயாத்துரை
வட்டு. வடக்கு
சித்தன்கேணி (3532)



### புறொயிலர் கோழி இறைச்சி விற்பனைக்கு

MAXIES (Halal-கலால்) புறொயிலர் கோழி இறைச்சி தோல் அகற்றி சுத்தம் செய்தது எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

விலை 1 Kg -500/=

வரணிமிசன் பண்ணை
விற்பனை நிலையம்
145,நவீன சந்தை, யாழ்ப் பாணம்.
T.P.: 2868 (3508)



### ✚ சம்பந்தர் மொடேன் ✚ கெல்த் கெயார் ஹொஸ்பிடல்

- ❖ பயிற்சி பெற்ற தாதிகள்.
- ❖ உதவித் தாதி பயிற்சி பெற விரும்புபவர்கள்.
- ❖ ஆங்கில மருந்தில் அனுபவமும், பயிற்சி பெற விரும்புபவர்கள்.
- ❖ Medical Laboratory பயில் விரும்புபவர்கள்.

தேவை

தகைமை :- G.C.E. O/L, A/L

22.09.2009 (செவ்வாய்க்கிழமை)நேரில் வரவும்

சம்பந்தர் மொடேன் கெல்த் கெயார் ஹொஸ்பிடல்
(மனோகரா தியேட்டர் அருகே)
50, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3541)



### LITTLE CHUTTYS' MONTESSORI

Dr.Maria Montessori யால் பரிந்துரைக்கப்பட்ட உபகரணங்கள் மூலமான கல்வி முறையைக் கொண்ட புதிய பாடசாலைச் சூழலில் ...

எதிர்வரும் விஜயதசமி தினத்தன்று

- ❖ ஏடு தொடக்கும் நிகழ்வு
- ❖ புதிய அனுமதிகளிற்கான விண்ணப்பம் வழங்கல் (வயது 3 முதல்)


அனுமதிகளுக்கான முடிவுத் திகதி :-
25.09.2009

இல. 05, புறூடி முன் ஒழுங்கை,
கண்டி வீதி, யாழ்ப்பாணம். — நிர்வாகி (C-3347)

தொலைபேசி இல. 071 5357592, 071 8237650


## கலைமாமணி கிறகரி கிறிஸ்தோபரின் ★ வைர விழாவும் மலர் வெளியீடும் ★

(யாழ்ப்பாணம்)




குருநகரின் கலைமாமணி கிறகரி கிறிஸ்தோப்பரின் வைரவிழாவும் மலர் வெளியீடும் இன்றுஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குருநகர் நாட்டுக்கூத்து மன்றத் தலைவர் சி. தார்சீசியஸ் தலைமையில் குருநகர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும், யாழ். மாவட்ட கலை கலா சாரப் பேரவைத்தலைவருமான க.கணேஷ் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் சுகுணரதி தெய்வேந்திரம், யாழ்.பல்கலைக் கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் ஆகியோரும்,

விசேட விருந்தினர்களாக கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ், கௌரவ விருந்தினர்களாக அருட்தந்தை ஆர்.எக்ஸ். சி.நேசராஜா அடிகளார், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக செயலாளர் கலாபூசணம் செல்லையா மெற்றாஸ் மெயில், ஐ.ஓ.எம்.யாழ். உப அலுவலக தலைமை அதிகாரி செல்வி நிக்கலீன் சாமிநாதர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். நிகழ்வில் மலர் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் நிகழ்த்துவார். (ச)

## கொழும்புக் கண்காட்சியில்...

கட்டங்களாக இடம்பெறும் எனத் தெரிவித்த அவர், ஒக்ரோபர் மாதம் 3ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரையில் படைகளின் விரிவாக்கம், சுடுதிறன் மற்றும் அவை போரின் வெற்றிக்கு ஆற்றிய பங்கு என்பன தொடர்பாக கண்காட்சி நடத்தப்படும் என்றார்.

பொறுப்புணர்வு, அர்ப்பணிப்பு, தியாகம், தொழில் முறை ஊடாகப் பெறப்பட்ட வெற்றி என்ற பொருளின் கீழ் இந்தக் கண்காட்சி பண்டாரநாயக்க நினைவான மண்டபத்திலும் கெத்தாராம விளையாட்டு மைதானத்திலும் இடம்பெறும் எனவும் அவர் கூறினார்.

இந்த விழாவின் மிகப் பெரிய கவர்ச்சி, விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், வெடிபொருட்கள், தற்கொலை படகுகள், நீர்மூழ்கி என்பன காட்சிப் படுத்தப்படும். இவை அனைத்தும் மாவிலாற்றில் தொடங்கி கடந்த மே மாதம்புதுமாத்தளனில் முடிபடைந்த போரின் போது கைப்பற்றப்பட்ட வை என்றார் மெண்டக சமரசிங்க.

தரைப்படையினருக்கு ஆசிவழங்கும் வகையில் தொடர்மதச்சடங்குகள் கூட இந்த காலப் பகுதியில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது. (ச-5)


### விற்பனைக்கு

பொற்பதி வீதி, கந்தர்மடம், மணியகாரன் லேன், ஆனைக்கோட்டை, பிரம்படி லேன், நல்லூர், யாழ்ப்பாணம், பிறவுண் றோட், மாம்பழம் சந்தி, வேம்படி வீதி, சோமசுந்தரம் அவனியூ, கல்வியங்காடு ஆகிய இடங்களில் வீடுகள், காணிகள் விற்பனைக்குண்டு. நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

தரகர் தேவையில்லை.
சேவை முகவர்.
தொடர்பு : சுந்தரம்
தொடர்பு நேரம் :- பகல் 1 மணி -2 மணி
T.P. 021 222 9177 (3546)


## மேல்மாகாணத்தை குழப்ப...

ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட தரைப்படை கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் மனோ பெரேரா குறிப்பிட்டதாவது, நாம் வடக்கில் சிறப்பு நடவடிக் கைகளில் ஈடுபட்டு நிறைவு செய்திருக்கின்றோம்.

அதேபோல் மேல் மாகாண மக்களை பாதுகாக்க வேண்டியதும் எமது பொறுப்பாகும். இந் நிலையில் எஞ்சியிருக்கும் விடுதலைப்புலி உறுப்பினர்களில் சிலர் மேல் மாகாணத்தில் தடங்கல் களையும், குழப்பங்களையும் ஏற்படுத்துவதற்கு முயற்சிப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் தலைவர்கள் அழிக்கப்பட்டுவிட்டாலும், அவர்களின் தற்கொலைப்படைகளைச் சேர்ந்த சிலரும் அவர்களை வழிநடத்துபவர்கள் சிலரும் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் எஞ்சி யிருக்கிறார்கள்.

பொலிஸாரும் படையினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது கைப்பற்றப்பட்ட தற்கொலை அங்கிகள் உள்ளிட்ட பல்வேறு உபகரணங்களிலிருந்து இது புலனாகின்றது.

இந்நிலையிலேயே தரைப்படையினரின் சாகச நிகழ்வுகளும், கண்காட்சியும் இடம்பெற விருக்கின்றன எனவே அரச நிகழ்வுகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பை இதற்கும்வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது என்றார் அவர். (ச-5)

## நிவாரணக் கிராமங்களிலுள்ள

# உறவினர்களை பொறுப்பேற்பதற்கான 1000 விண்ணப்பங்கள் மாவட்ட செயலகத்தில்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் பாதுகாப்பின் கீழ் நிவாரணக் கிராமங்களில் அல்லது நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் மக்களை குடும்பங்களாக அல்லது தனியாட்களாக பொறுப்பேற்பவர்களுக்கு மாவட்டச் செயலகத்தால் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்பட்ட விண்ணப்பங்களில் கீழ்க் குறிப்பிடப்படும் பிரதேச செயலகங்கள் / உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலிருந்து இவ்விடயம் சம்பந்தமாக ஆயிரம் விண்ணப்பங்கள் மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதில் வேலணை பிரதேச செயலகத்திலிருந்து 47 களும், காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையிலிருந்து 63, யாழ். பிரதேச செயலகத்திலிருந்து 100, நல்லூர் பிரதேச செயலகத்திலிருந்து 100,சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலிருந்து 400, உடுவில் பிரதேச செயலகத்திலிருந்து 40, சாவகச்சேரி பிரதேச செயலகத்திலிருந்து 250 ஆக மொத்தம் ஆயிரம் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இவற்றினை உரிய அதிகாரிகளுக்கு வெகுவிரைவாக அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

இல. 123 பிறவுண் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்திருக்கும் எவர்சைன் கல்வி நிறுவனத்தின் மாபெரும் கல்விக் கண்காட்சி நாளை திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 5 மணிவரை நிறு வனத்தின் இயக்குநர் செ. ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மகப் பேற்று நிபுணர் ச. பவானி கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக யாழ். பல் கலைக்கழக விலங்கியற்துறைத் தலைவர் திருமதி நித்திய கௌரிராஜன், வலம்புரி பத்திரிகை இயக்குநர் சி. வெற்றிவேலாயுதம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ-4)

## நவராத்திரி பாமாலை



### வீரத் தாயவளுக்கு விண்ணப்பமொன்று

ஆரத்தமிழ் மாலை சூடி விண்ணப்பம் செய்கின்றோம்
அவனிதனில் வாழ்ந்துயர ஆற்றலைத் தருவாயம்மா
வீரத் தாயவளே! உன்னைப் பணிகின்றோம்
விடிவு தந்தெம்மைக் காத்தருள்வாயம்மா
தீரமுடன் கற்றுயர திருவருள் செய்திடுவாய்
தேவி துர்க்கையம்மா திருவருள் பொழிவாயம்மா
சூரத்தனமகற்றி சுபீட்சம் அருளிடுவாய்
துணிவதனைப் பெருக்கி துயரம் நீக்கிடுவாய்.

அ.கலாநிதி

### சக்திகள் மூன்று ஒன்பது இரவுகள்



மும்மூன்று ஒன்பது இராத்திரிகள்
தவம் இருந்து – அதில்
முதலாம் மூன்று நாட்கள்
மலைமகளை மனதிருத்தி
மூன்றின் பின் ஆறுவரை
அலைமகளின் அடியணிந்து
முறையான கல்வி தரும்
கலைமகளோ டிறுதி மூன்றில்
முத்தான ஒன்பதும் முடிந்தபின்னால்
நற்காரியங்கள் தொடங்கிடுவோம்!

பே. கபில்
யாழ். இந்துக் கல்லூரி

## மாநகரசபை எல்லைக்குட்பட்ட

# சனசமூக நிலையங்களின் தேவைகள் பற்றி ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட சனசமூக நிலைய பிரதிநிதிகளுடன் மாநகர முதல்வரின் கலந்துரையாடல் நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதேசங்களின் அபிவிருத்திப் பணிகள், குறைகள், தேவைகள் என்பன பற்றி ஆராயப்பட்டதுடன் மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஒவ்வொரு பிரதேச வட்டாரங்களும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதேச அபிவிருத்தி பணியில் சனசமூக நிலைய பிரதிநிதிகள் தங்கள் பிரதேசங்களில் உள்ள குறை நிறைகளை மாநகராட்சி மன்ற உறுப்பினர்களிடம் எழுத்து மூலம் தெரிவிக்கும்படியும் அத்தேவைகள் மிகவிரைவில் பூர்த்தி செய்து கொள்ளப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் சனசமூக நிலைய பிரதிநிதிகள் 80 பேர் கலந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-30)

# அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

விஜயதசமியன்று ஏடு தொடக்கவுள்ள சகல பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் அனைத்தும் 'அரிச்சுவடி' ஏடுகளையும், ''நவராத்திரி பூஜா மலர்'' புத்தகத்தையும் யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் உள்ள மில்க் வைற் சோப் தொழிற்சாலையில் அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுமாறு தொழிலதிபர் சிவநேயர். இ. தவகோபால் தெரிவித்துள்ளார். (ஓ)

## பழங்களில் இருந்தான

# உற்பத்திகள் தொடர்பான பயிற்சி நெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினால் நடாத்தப்படவுள்ள பழங்களை மூலப் பொருளாக கொண்ட உற்பத்தி தொடர்பான பயிற்சி நெறி எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு விதாதா வள நிலையத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச பா. செந்தில் நந்தனன் கலந்து கொண்டு பயிற்சி நெறியினை ஆரம்பித்து வைக்கவுள்ளதுடன் சிறப்புவிருந்தினராக நல்லூர் உதவிப் பிரதேச செயலர் ஆ. சோதிநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

மூன்று தினங்கள் நடைபெறவிருக்கும் இப்பயிற்சி நெறிக்கு ஏற்கனவே பதிவுகளை மேற்கொண்டவர்கள் குறித்த நேரத்திற்கு புதிதாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள பலாலி வீதி, கந்தர்மடம் எனும் முகவரியில் அமைந்துள்ள விதாதா உளநிலையத்திற்கு சமூகமளிக்குமாறு நல்லூர் பிரதேச செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-30)

## வடமாகாண விளையாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வுகள்

வடமாகாண விளையாட்டு விழாவின் இறுதி நாளான இன்று ஞாயிற்றுக்கிழமை வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கான பரிசளிப்பு விழா இடம்பெறவுள்ளது.

அத்துடன் மாலை 5 மணிக்கு யாழ். ஜேம்ஸ் அன்ரனின் பிறண்ஸ் இசைக்குழுவினரின் இன்னிசை நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஓ-6-51)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர நாதர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

10 நாட்களும் ஸ்ரீ நாராயண அமுதசுரபி அன்னதான சபையினரால் நாராயண சேவையும் இடம்பெறவுள்ளது. (ஓ-36)

## சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள்

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு ஒக்டோபர் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை கைதடி அரச முதியோர்இல்லத்தில் விசேட நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

இதில் சேவை மனப்பான்மையுள்ள நாடக நிறுவனங்கள் மற்றும் கலைஞர்கள் பங்கு கொள்ளவுள்ளதாக இல்ல அத்தியட்சகர் தெரிவித்துள்ளார். (ஓ-51)



சங்கானை ப.நோ.கூட்டுறவு சங்கத்தினால் அராலியில் அமைக்கப்பட்ட சிறிய கூட்டுறவு நகர் கிளை திறப்பு நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா கிளையை திறந்து வைப்பதையும், அருகில் விருந்தினர்கள் நிற்பதையும், வலிமேற்கு பிரதேச சபை முன்னாள் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி வட்டுக்கோட்டை பிரதேச அமைப்பாளர் வே.மகேந்திரன் மற்றும் விருந்தினர்கள் சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்களை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : கோபி)


**Affiliated with JOBSNET**
**Ministry of Labour Relation and Manpower**

18 வருட அனுபவம்

தபால் மூலம்

ஆறுமாத கால டிப்ளோமா
Course Length-Six Month
Sep 2009 to Feb 2010

1.Dip.in psychology (உளவியல் டிப்ளோமா)
2.Dip.in Office Administration (காரியாலய நிர்வாக டிப்ளோமா)
3.Dip.in Civil Engineering (சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா)
4.Dip.in Nursing Administration (தாதியர் நிர்வாக டிப்ளோமா)
5.Dip.in Human Resources Management (மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா)
6.Dip.in Montessori (மொண்டிசூரி டிப்ளோமா )
7.Dip.in Business Management (வியாபார முகாமைத்துவ டிப்ளோமா)
8.Dip.in Health & Hospital Management ( சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா)
9.Dip.in Banking Management ( வங்கி முகாமைத்துவ டிப்ளோமா)
10.Dip.in Research & Development ( ஆய்வு மற்றும் அபிவிருத்தி டிப்ளோமா)
11.Dip.in Sales & Marketing Management ( விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா)
12.Dip.in Educational Management ( கல்வி முகாமைத்துவ டிப்ளோமா)

பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன் மற்றும் நுவரேலியா

மேலதிக விபரங்களைப் பெற உங்களது பெயர்,முகவரி,தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile:0777 140 844/ 071 803 4848

யாழ்ப்பாண முகவர்
S.N.Piratheepan
077-6702505

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR.A.HASSEN
(B.Sc.Psychology,M.Sc.Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24,1st Floor, Supermarket complex,Main Street,Sainthamaruthu-07.
Web: www.aiimas.com,www.iimat.com,www.aicomas.org
Tel: 067 2222917, 060 2671749,060 2679688,071 803 4848

(3509)

விண்ணப்ப முடிவுத் திகதி: 28.09.2009

தேவை

# யாழ்.நகரில்

## காட்சியறையுடன் கூடிய காரியாலயக் கட்டடம் களஞ்சிய வசதியும் அவசியம்

நுகர்வோர் பாவனை, விவசாயம் மற்றும் தோட்டக்கலை சார்ந்த உபகரணங்களில் தற்போது முன்னிலை வகிக்கும்

**சிறிலங்கா ஸ்தாபனத்திற்கு**


யாழ் நகர எல்லைக்குள் பிரதான வீதி ஒன்றிற்கு அருகாமையில் 2000 சதுர அடி அளவுள்ள கட்டட வசதியும் அதனுடன் கூடிய களஞ்சிய பாவனைக்குகந்த 1600 சதுர அடி வெற்றுக் காணியும் தேவைப்படுகிறது.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்

077 3033801 / 0772620974

(3336)


# தமிழக மீனவர்கள் வேலை நிறுத்தம்



(இராமேஸ்வரம்)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள், அனுராதபுரம்சிறையில் அடைக்கப்பட்டனர்.

இவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுமுன்தினம் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து செப்டெம்பர் 16 ஆம் திகதி மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற 21 மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் பிடித்து, தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.மீனவர்கள் சென்ற ஐந்து படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

மீனவர்களில் நான்கு பேரை மட்டும், மன்னார் நீதிமன்ற உத்தரவுப்படி வியாழக்கிழமை அனுராதபுரம் சிறையில் அடைத்தனர்.

மற்ற 17 மீனவர்களும் நேற்றுமுன் தினம் காலை தலைமன்னார் பொலிஸாரால் மன்னார் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

நீதிபதி விசாரணைக்குப் பின், மீனவர்களை சிறையில் அடைக்க உத்தரவிட்டதைத் தொடர்ந்து,17 மீனவர்களும் அனுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

மேலும், இலங்கை - இந்தியத்தூதரக அதிகாரிகளின் வேண்டுகோளை ஏற்று, கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகுகளைப் பராமரிக்க , மன்னார் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதைத் தொடர்ந்து, மீனவர்களின் ஐந்து படகுகளும், தலைமன்னார் கடற்படை முகாமில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டன.

இந்நிலையில்,சிறையில் அடைக்கப்பட்டுள்ள 21 மீனவர்களையும், ஐந்து படகையும் உடனடியாக விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று முன்தினம் முதல் கடலுக்குச் செல்லாமல், காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால், இராமேஸ்வரம் துறைமுகத்தில் ஏராளமான படகுகள் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன. (ஓ-6)


## ஐங்கரன் திருமண சேவை

### மணமகள் தேவை

எங்களிடம் யாழ்.இந்து உயர்குலம் U.K Citizen 29, 32,39 வயது, Canada Citizen 35 வயது, (R.C- றோமன் கத்தோலிக்கம்), Holand Citizen 30, 36 வயது,Canada Citizen 30,33 வயது, France Citizen 28 வயது (R.C-றோமன் கத்தோலிக்கம்) ஆகிய மணமகன்மார் உள்ளனர். தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர். 24 மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை. *தொடர்பு :- லண்டன் ஐங்கரன்*

T.P No.-0044-7535384166 -0044 - 7508295863 Fax No-0044-2086810701 -0044 -2086720673

(3503)

### மணமகன் தேவை

எங்களிடம் யாழ்.இந்து உயர்குலம் U.K Citizen 25,28, 33,36 வயது, Canada Citizen 34,31 வயது, Austerliya Citizen 37 வயது, (Doctor), Swiss Citizen 26 வயது, France Citizen 25 வயது ஆகிய மணமகள்மார் உள்ளனர். தகுந்த மணமகன்மாரை எதிர்பார்க்கின்றனர். 24மணிநேர தொலைபேசி வசதி உண்டு. பதிவுக் கட்டணம் எதுவும் இல்லை. *தொடர்பு :-லண்டன் ஐங்கரன்*

T.P No.-0044-7535384166 -0044 - 7508295863 Fax No-0044-2086810701 -0044 -2086720673

(3503)


# 53ம் நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



இனியவராய் 16.01.1927 | இனியெவராய் 30.07.2009

## அமரர் வைத்திலிங்கம் கந்தையா குணரத்தினம் (V.K.K)

(பிரபல வர்த்தகர் , யாழ்.குணரத்தினம் ஸ்ரோர்ஸ்., வட்டுக்கோட்டை ஸ்ரீ முருகன் அரிசி ஆலை)

அன்பின் திருவுருவே!

பாசத்தின் தன்மை காட்டி பண்பின் பெருமை சொல்லி
உறவென்றால் இது வென்று உடனிருந்து காட்டினீர்கள்
கோடை மழையாய் குளிர்ந்ததப்பா உங்கள் உறவு
வாடைக்குளிராய் வாட்டுதப்பா உங்கள் பிரிவு
மண்மீது தவழாமல் மடி மீது வளர்த்தீர்கள்
மடிபோன துயரத்தில் மனம் இருந்து வாடுதப்பா
துயில் கொள்ளும் போதினிலே உங்கள் துயில் கொண்டு போத்துவீர்கள்
இன்று உங்கள் துயில் கண்ட வேளையிலே மனம் துவண்டு போனதப்பா
வானிலே தெய்வமாகி நாம் வாழ வாழ்த்திடப்பா
மாண்டுபோன உயிர்களெல்லாம் மீண்டும் வரும் நாளிருப்பின்
அந்த நாளில் உங்களுக்காய் காத்திருப்போம் எங்களிடம் வந்திடப்பா.

எங்களின் உயரிய வாழ்வுக்கு வழிகாட்டியாக விளங்கி ஒளியூட்டிய எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் (கொழும்பில்) நேரில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி, தொலைநகல் , மின்னஞ்சல் , தந்திகள் மூலம் எமக்கு ஆறுதல் கூறிய அன்புள்ளங்கள் அனைவருக்கும் எமது அன்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற கொக்குவில் கேணியடி லேன் ஞானவைரவரை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி

கேணியடி
கொக்குவில் மேற்கு

(C-3342)

குடும்பத்தினர்

# சனிப்பெயர்ச்சி 26.09.2009 முதல் 14.11.2011 வரை உங்களுக்கு எப்படி?

## மீனம்

(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)

நிதானத்தோடு செயற்பட்டால் நிச்சயம் வெற்றி உங்களுக்கு !

நட்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மீன ராசி நேயர்களே!

எப்பொழுது பார்த்தாலும் ஏதேனும் ஒன்றைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருப்பவர் கள் நீங்கள். இப்பொழுது உங்கள் சிந்தனையெல்லாம் சனிப்பெயர்ச்சியிலேயே இருக்கும். வரும் சனி கண்டச்சனியாக வருகிறது. ஏழாமிடத்தில் வந்த சனி சப்தம பார்வையாக உங்கள் ராசியைப் பார்க்கப்போகிறது.

அந்தச் சனி உங்களுக்கு பெரியளவில் பாதிப்புகளைக் கொடுக்க மாட்டார்.காரணம் உங்கள் ராசிநாதன் சுப கிரகமான குருவாகும்.

நல்லவர்களோடு இணைந்து நீங்கள் செயல்படும் பொழுது சனியின் ஆதிக்கம் உங்களைத் தாக்காது.

கடமையிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பதால் தான் இளமையிலேயே நீங்கள் ஏராளமான பதவிகளை வகிக்க முடிகிறது. வாழ்க்கைத் துணை தான் வாழ்வின் வெற்றிக்கு காரணம் என்று சொல்வீர்கள். குல தெய்வ நம்பிக்கை உங்களுக்கு அதிகம் உண்டு.

சனி உங்கள் ராசிக்கு லாபாதிபதியாகவும் விரயாதிபதியாகவும் விளங்குகிறார். எனவே இலாபம் விரயம் இரண்டுமே சனியின் கையில் தான் இருக்கிறது.

உங்கள் சுய ஜாதகத்தில் குரு இருக்கும் நிலையறிந்து அதற்குரிய சிறப்பு பரிகாரங்களை முறையாகச் செய்தால் எந்த நாளும் இனிய நாளாக மாறும். தென்முகக் கடவுள் கார்த்திகைப் பெண்களுக்கு உபதேசம் செய்யும் ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வந்தால் நன்மைகளை அதிகம் சந்திக்க நேரிடும்.

நவாம்சத்தில் குரு இருக்கும் நிலையறிந்து அதைப் பார்க்கும் கிரகத்தின் பலமறிந்து அதற்குரிய எண்ணாதிக்கத்தில் உங்கள் பெயரையும் உங்கள் தொழில் நிலையத்தின் பெயரையும் அமைத்துக்கொண்டால் வாழ்க்கை வளமாக அமையும்.

களத்திர காரகன் சுக்ரன் என்பதால் திருமணப் பொருத்தத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இந்த சனிப் பெயர்ச்சி உங்களுக்கு சாதகமான பெயர்ச்சி தானா என்பதைப் பற்றிப் பார்ப்போம்.

**ஏழாமிடத்துச் சனியால் இனிய பலன் ஏற்படுமா?**

இதுவரை உங்கள் ராசிக்கு ஆறாமிடத்தில் சஞ்சரித்து வந்த சனி பகவான் இப்பொழுது ஏழாமிடத்திற்கு வரப் போகிறார். கண்டச் சனியாக வருகிறதே என்று கவலைப் பட வேண்டாம். கொண்டாடி வழிபட்டால் கண்டச் சனி கூட கவலையில்லாத வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கும் என்பதை அனுபவத்தில் காணலாம்.

உங்கள் ராசிக்கு பதினொன்று பன்னிரெண்டுக்கு அதிபதியாக விளங்குகிறார். அவர் லாப ஸ்தானம் மற்றும் விரய ஸ்தானத்திற்கு அதிபதியாவதால் அவர் 7இல் சஞ்சரிக்கும் பொழுது வாழ்க்கைத் துணை வழியே லாபமும் வரலாம். விரயமும் வரலாம். எனவே வாழ்க்கைத் துணையின் பெயரில்



அமைந்த தொழிலிலும் இதே போல் எற்ற இறக்கமான நிலை ஏற்படலாம். தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. இடமாற்றம் ஊர் மாற்றம் இலாகா மாற்றங்களும் ஒரு சிலருக்கு உருவாகும். தெசா புத்தி வலுப்பெற்றவர்கள் மனக்கசப்பு தரும் சம்பவங்களை அதிகம் சந்திக்க மாட்டார்கள்.

சப்தம ஸ்தானத்திற்கு வரும் சனியால் அது பார்க்கும் இடங்கள் 1 , 4 , 9 ஆகிய இடங்களாக அமைகிறது. எனவே , உடல் ஆரோகியம் , அறிவாற்றல், சுகம் , தாய் , தந்தை பூர்வீகம், கால்நடைகள், வாகன யோகம் ஆகிய அனைத்து ஆதிபத்யங்களிலும் மாற்றங்களை உருவாக்கப் போகிறார்.

குறிப்பாக ஆரோக்கியத்தில் அடிக்கடி அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு அகலும். அலைச்சல் அதிகரிக்கும் .கொடுக்கல் வாங்கல்களில் கூடுதல் கவனம் செலுத்தினால் விரயங்களிலிருந்து விடுபடலாம். வாகனங்களில் செல்லும் பொழுது விழிப்புணர்ச்சியுடன் சென்றால் வழியில் தாக்குதல்களில் இருந்து தப்பிக்கலாம். சனி வழிபாட்டை முறையாக செய்து காகத்திற்கு சோறிட்டு அவர்வாகனத்தையும் திருப்திப்படுத்தி வந்தால் வரும் இடையூறுகள் வந்த வழியே திரும்பும்.

**வந்த சனி தந்திடும் பலன்கள் !**

ஏழாமிடத்தில் வந்த சனி முதலில் வரவைக் காட்டிலும் செலவை அதிகரிக்க வைப்பார்.வருங்கால நலன் கருதி எடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவர்களில் ஒரு சிலர் விலகுவர். மருத்துவச் செலவுகள் கூடும். மன அமைதி இல்லையே என்று சிந்திப்பீர்கள். லாபாதிபதியாகவும் சனி விளங்குவதால் கடைசி நேரத்தில் பணம் வந்து சேர்ந்து காரியங்களை முடிக்க வைக்கும். மூத்த சகோதரத்தால் ஏற்பட்ட இடையூறுகள் அகலும்.

முன்னேற்றப் பாதையை நோக்கி நீங்கள் அடியெடுத்து வைக்கும் பொழுது உறவினர்களைக்காட்டிலும் நண்பர்களே ஒத்துழைப்புச் செய்வார். இரட்டித்த சிந்தனைகளைத் தவிர்ப்பது நல்லது.

**மந்தன் பார்வையால் ஏற்படும் பலன்கள்!**

உங்கள் ராசிக்கு பதினொன்று மற்றும் பன்னிரெண்டுக்கு அதிபதியான சனி பகவான் ஏழில் நின்று கொண்டு1 , 4 , 9 ஆகிய இடங்களைப் பார்ப்பதால் இந்த சனிப் பெயர்ச்சி காலம் முழுவதும் நீங்கள் அருகில் இருப்பவரை அனுசரித்துச் செல்வதன் மூலமே பெருகிய பலன்களைக் காண இயலும்.

சனியின் பார்வை உங்கள் மீது நேரடியாகப் பதிவதால் துணிவும் தன்னம்பிக்கையும் குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. முன்கோபத்தைக் குறைத்துக்கொண்டால் முட்டுக் கட்டைகளை தகர்க்க இயலும் வீடு வாங்க எடுத்த முயற்சியில் ஆர்வம் குறையலாம். இருப்பினும் குடும்ப உறுப்பினர்களில் யார் பெயரில் சொத்துக்கள் வாங்கினால் நிலைக்கும் என்பதைக் கண்டறிந்து பிறகு அனுகூலம் தரும் நாளில் பூமியோகம் தரும் கோவிலுக்கு சென்று வழிபட்டு வருவது நல்லது. அதன் பிறகு சொத்துக்கள் நிலைக்கும் ஆற்றல் உண்டு.

தகப்பனார் ஸ்தானத்தைப் பார்க்கும் சனி , பாகப் பிரிவினைகளைச் சுமுகமாக முடித்து வைக்கும் பூர்வீக சொத்துக்களை விற்று புதிய சொத்துக்களை வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம் .வெளிநாட்டு பயணம் கைகூடும். கூட்டு முயற்சியில் ஈடுபடுவோர் தனித்தியங்க முற்படும் நேரமிது. ஆனால் மாற்றினத்தவர்களை கூட்டாகச் சேர்த்துக் கொண்டால் மகிழ்ச்சியைக் கடைசி வரை தக்க வைத்துக் கொள்ள இயலும்.

யோக பலம் பெற்ற நட்சத்திரமும் , வியாழக்கிழமையும் இணையும் நாளில் தெசா புத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொண்டால் வளர்ச்சியும் கூடும். வருமானமும் திருப்தி தரும்.

**ராகு –கேது பெயர்ச்சிக் காலம்!**

27.10.2009 இல் தனுசு ராசியில் ராகுவும் மிதுன ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். பத்தாமிடத்தில் சஞ்சரிக்கப் போகும் கோதண்ட ராகு உங்களுக்கு முத்தான வாய்ப்புக்களை அள்ளி வழங்கப் போகிறார். தொழில் வளம் பெருகும். தொலைபேசி வழி தகவல் மகிழ்ச்சியைக் கொடுக்கும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்க வள்ளல்கள் வரிசையாக வந்து நிற்பர். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

நான்காமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் நற்பலன்கள் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். சுகங்களும் சோகங்களும் மாறி மாறி வரும். புதிய சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். உடன் பிறப்புக்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். இக்காலத்தில் ராகு –கேதுக்களுக்குரிய சிறப்புப் பரிகாரங்களை அதற்குரிய ஸ்தலங்களுக்குச் சென்று முறையாகச் செய்து வந்தால் முன்னேற்றமான வாழ்க்கை அமையும்.

**குருப்பெயர்ச்சிக் காலம்!**

கன்னி ராசியில் சனி சஞ்சரிக்கும் பொழுது கும்ப ராசியில் குரு 15.12.2009 முதல் சஞ்சரிக்கப் போகிறார். ராசிநாதன் விரயஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் விரயங்கள் கட்டுக் கடங்காமல் போகலாம்.வீடுகள் மற்றும் விலை உயர்ந்த பொருட்களை விலைக்கு கொடுக்கும் சூழ்நிலையும் ஒரு சிலருக்கு உருவாகலாம். தெசா புத்தி பலம் இழந்திருப்பவர்கள் முன்னெச்சரிக்கையாக அவைகளை ஒழுங்கு செய்து கொள்வது நல்லது. தொழிலில் வரும் இழப்புகளைச் சமாளிக்க பணியாளர்களை அடிக்கடி கண்காணிப்பது நல்லது. உத்தியோகத்தர்கள் உடன் இருப்பவர்களை அனுசரித்துச் செல்லாவிட்டால் வீண் பழிகள் வந்து சேரலாம். எனவே விருப்ப ஓய்வில் ஒரு சிலர் விலகிக் கொள்வர். பிரதோஷ வழிபாட்டையும் நந்தி வழிபாட்டையும் பௌர்ணமி கிரிவல வழிபாட்டையும் மேற்கொண்டால் துயரங்கள் துள்ளி ஓடும். குரு தெட்சிணாமூர்த்தியை வழிபட்டால் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.

மீனத்தில் குரு வரும் பொழுது தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும்.

ஜோதிடக் கலைமாமணி
சிவல்புரி சிங்காரம்

**சனியின் வக்ர காலம் பொற்காலமாக மாற...**

14.01.2010 முதல் 31.05.2010 வரை மீண்டும் 27.01.2011 முதல் 13.06.2011 வரை சனி வக்ர இயக்கத்தில் இருந்து செயல்படுகிறார்.

இதன் விளைவாக தொழிலில் வரவேண்டிய தொகைகள் தங்கி நிற்கலாம் .பிரயாசை எடுத்து எதையும் முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். அடுத்தவர்களுக்கு வாக்கு கொடுக்கும் பொழுது யோசித்துச் சொல்வது நல்லது. எதிரிகளின் பலம் குறைய இறை வழிபாடு உங்களுக்கு கை கொடுக்கும். அரசியலில் பொறுப்புகளில் இருப்பவர்களுக்கு பதவி மாற்றங்கள் உருவாகலாம். உத்தியோகத்தர்களுக்கு நீண்ட தூரங்களுக்குச் சென்று பணிபுரியும் வாய்ப்பு கூட வந்து சேரலாம். எள் தீபமேற்றி சனியை வழிபாட்டால் நல்ல பலன்களை நாளும் எதிர்பார்க்கலாம்.

சிறப்பு வழிபாடு

கன்னிச் சனியின் எண்ணிய காரியம் வெற்றி பெற வழிபாடு!

ஏழாமிடத்தில் வரும் சனியால் இனிய பலன்களைக் காணவும் எடுத்த காரியங்களில் வெற்றி பெறவும் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள் வது நல்லது.

மந்தனாம் சனியே!
உந்தன் மகத்துவம் அறிந்து
கொண்டேன்!
வந்ததோர் துயரம் நீக்கு!
மனதினில் அமைதி கூட்டு!

என்று பாடுங்கள் சனி உங்களுக்குச் சகல யோகங்களையும் வழங்குவார்.

(தொடரும்)

# ஐ.தே.க. வும் ஹெல உறுமயவும் இனப்பிரச்சினை குறித்துப் பேச்சு

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்காக ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்வைக்கப் பட்டுள்ள யோசனை குறித்து எதிர்க்கட்சியின் பிரதிநிதிகள் சிலருக்கும் ஜாதிக ஹெல உறுமயவின் ஆலோசகர் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவிற்கும் இடையில் ஆரம்பக்கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டிருப்பதாக எதிர்க் கட்சித் தலைவரின் பணிமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஆரம்பக்கட்டப் பேச்சுவார்த்தையானது ஒற்றையாட்சி இலங்கை என்ற யோசனையை ஏற்றுக்கொள்வதாக ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் நிலைவேற்றப்பட்ட யோசனையின் அடிப்படையிலேயே நடைபெற்றுள்ளது.

இந்த ஆரம்பக்கட்டப் பேச்சவார்த்தைகளில் ஜாதிக ஹெல உறுமயவின் பிரசார செயலாளர் நிஸாந்த ஸ்ரீ வர்ணசிங்கவும் கலந்து கொண்டுள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள இந்தப் பேச்சுவார்த்தை உதவியதாகவும் அடுத்த சில வாரங்களுக்குள் மேலும் சில சுற்றுப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் அந்த தகவல்கள் மேலும் தெரிவித்தன. (ச–5)

## கிழக்கு மாகாண சபையின்

# பொதுச்செயலாளரின் பதவியை நீடிக்க ஜனாதிபதி எடுத்த தீர்மானத்திற்கு சந்திரகாந்தன் எதிர்ப்பு

கிழக்கு மாகாண சபையின் பொதுச் செயலாளராக கடமையாற்றிய 60வயதான பாலசிங்கம் என்பவரின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானத்திற்கு முதலமைச்சர் சந்திரகாந்தன் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் அடிப்படையில் பொதுச்செயலாளரின் நியமனம் தொடர்பில் முதலமைச்சரின் கருத்து கோரப் படவேண்டும் என்ற போதி லும் பாலசிங்கம் விடயத்தில் இந்த விதிமுறை பேணப்பட வில்லை என முதலமைச்சர் சந்திரகாந்தன் விசனம் தெரிவித்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மாகாண சபை விதிகளுக்கு புறம்பான வகையில் செயற்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் சந்திரகாந்தன் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மகாண சபையில் பொதுச் செயலாளராகப் பணியாற்றி வரும் பாலசிங்கம் மாகாண ஆளுநருக்கு சார்பாக செயற்பட்டு வருவதாக சந்திரகாந்தன் குற்றம் சுமத்தியுள்ளார். (ஓ–6)

# யுத்தத்தால் பட்டதுன்பம் போதும் இப்படி ஒரு நிலை இனி வேண்டாம்

## இராமாவில் முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் உணர்வுகள்

வன்னிப் பகுதியில் நடைபெற்ற மோதல்களின் காரணமாக இடம் பெயர்ந்து வவுனியாவிலும், யாழ்ப் பாணத்திலுமென முகாம்களுக்குள் வாழ்ந்துவரும் சுமார் மூன்று இலட் சம் பொதுமக்களில், யாழ் குடா நாட்டைச் சேர்ந்தவர்களை விடுவிக் கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப பட்டுள்ளது.

முதற் கட்டமாக யாழ்ப்பாணம் அல்லாரை இராமாவில் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த யாழ் குடாநாட்டைச் சேர்ந்த 3,112 பேர் ஓகஸ்ட் முதல் வாரத்தில் விடுவிக் கப்பட்டனர்.

ஓகஸ்ட் 5ம் திகதி இராமாவில் முகாம்களிலிருந்து அழைத்துவரப் பட்ட இந்த மக்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் தமது சொந்த இடங்களுக்குச் செல் வதற்காக, ஜனாதிபதியின் ஆலோச கரும், பாராளுமன்ற உறுப்பினரு மான பசில் ராஜபக்ஷ மற்றும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா ஆகியோர் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர்.

யாழ் குடா நாட்டின் வெவ்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த இந்த மக்களிடமிருந்து, அவர்களது சொந்த இடத்தின் அல் லது செல்ல விரும்பும் இடத்தின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு, அந் தந்தப் பிரதேச கிராமசேவையாளர் கள், பிரதேச செயலர்ளர்கள் மூல மாக உறுதிப்படுத்தப்பட்டு இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது விடுவிப்புக்கான அனைத்து முயற்சிகளையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவே மேற்கொண்டதாக நிகழ்வில் உரை யாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். இவர் களுக்கான ஒரு தொகுதி உதவிப் பொருள்களை விடுவிப்பு நிகழ்வில் கலந்துகொண்ட யாழ் அரசாங்க அதிபர் கே.கணேஸ் வழங்கினார்.


அன்றையதினம் விடுவிக்கப்பட்டு தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்ட பொதுமக் களைச் சந்தித்து உரையாடிய போது அவர்க்ள் வெளியிட்ட உணர்வுகள் விபரிக்க முடியாதவை. இங்கே அவர்கள் எம்முடன் பகிர்ந்து கொண்ட அவர்களது உள்ளக்கிடக் கைகள் சிலவற்றை எமது வாசகர் களுக்காகத் தருகிறோம்.

**அ.பங்கயற்செல்வன்**

**பாடசாலை அதிபர்**

எவ்விதமான பொருள்களையும் எடுத்துக்கொள்ளாமல் ஏதிலிகளாக, உயிரைப் பாதுகாத்துக்கொள்ள வன்னியிலிருந்து அரச கட்டுப்பாட் டுப் பகுதிக்குள் வந்தோம்.

அண்மையில் இராமாவில் முகா முக்கு வருகை தந்திருந்த சமூக சேவைகள் மற்றும் சமூக நலத் துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா யாழ்.மாவட்ட மக்களை தான் பொறுப்பேற்பதாகக் கூறியிருந் தார். இன்று அதனைச் செய்திருக் கிறார்.



முகாம்களில் உணவு, தங்குமிட வசதிகள் திருப்திகரமாக இருந்த போதிலும் குடிநீர், மலசலகூட வசதிகள் போதியளவு இன்மையால் கஷ்ரப்படவேண்டியிருந்தது. பாடசாலை மாணவர்களின் கற்ற லுக்கு வளாகம் அமைக்கப்பட்டு கற் றல், கற்பித்தலுக்கான வசதிகள் ஓரளவு செய்யப்பட்டிருந்தன.

இங்குள்ள மக்கள் இப்போது கேட்பதெல்லாம் அமைதியான வாழ்க்கை மட்டுமே. அத்தோடு நலன் புரி நிலையங்களிலுள்ள ஏனைய மக்களும் எம்மைப்போன்று விடுவிக் கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும், ஜனாதி பதியிடமும் நாம் வேண்டுகோள் விடுக்கிறோம்.

**எஸ். தெய்வேந்திரம்**

பாசையூரைச் சேர்ந்த நான் மன் னார் வெள்ளாங்குளத்திலிருந்து இறுதியாக யுத்தம் நடைபெற்ற புது மாத்தளன் பகுதி வரையில் பல தட வைகள் இடம்பெயர்ந்து அலைந் தோம்.

பின்னர் புதுமாத்தளனிலிருந்து படகுக்காரரிடம் 30 ஆயிரம் ரூபா கொடுத்து எமது குடும்பத்திலுள்ள 3பேர் உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்திருந் தோம்.

இன்று யாழ்பாணத்தைச் சேர்ந்த வர் என்ற அடிப்படையில் விடு விக்கப்படுகின்றோம். எப்படியோ, இன்று எங்கள் இடங்களுக்குச் செல் வதில் சந்தோஷம். இதற்காக பாடு பட்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**சி.தெய்வம்மா**

கடைசியாக வன்னியில் நாங்கள் இருந்த பகுதிகளில் மிகக் கடுமை யான சண்டை நடந்தது. அனேக மான மக்கள் தமது உறவுகளை தாய்பிள்ளைகளை இழந்தும், பிரிந் தும், உயிரை மட்டும் காப்பாற்றி னால் போதுமென வந்திருக்கிறார் கள். இண்டைக்கு எங்கட சொந்த இடங்களுக்கு போவதை நினைச்சுப் பெரிய சந்தோஷம்:

உண்மையில் நாங்கள் இப்படி வருவோம் என்று நினைக்க வேயீல்லை. சொத்து, சொந்தம் எல் லாம் போச்சு. வாழலாம் என்ற நம் பிக்கை மட்டும் இருக்கு. எல்லாத்தை யும் நம்பி ஏமாந்திட்டோம். எங் களைப்போல முகாம்களிலுள்ள மக் களும் விடுவிக்கப்படவேண்டும். இதற் காக பாடுபட்ட எல்லோருக்கும் நாங் கள் நன்றி தெரிவிக்கின்றோம்.

**சின்னப்பு நடராசா**

இந்தச் சண்டையில் வீணா கஷ்டப்பட்டதும் முகாம்களில் அகதி வாழ்க்கை வாழ்ந்தும் சாப்பாட்டுக்கு வேறொருவரின் கையை எதிர்பார்த்து காத்திருந்ததும் போதும். இண் டைக்கு எங்கள் சொந்த இடங்க ளுக்குச் சென்று சந்தோஷமாக வாழலாம் என்று நினைக்கிறோம்.

கடைசியாக நாங்கள் வாழ்ந்த இடத்தை நினைக்கவே வேதனை

**கிருஷ்ணி இ.ஃபாம். கந்தசாமி**

யாக இருக்கு. எங்கட சந்தோஷம், இரத்தம், கண்ணீர், எல்லாம் அந்த மண்ணில் சிந்தியாச்சு. இப்படி ஒரு நிலை இனி எங்களுக்கு வேண்டாம். இண்டைக்கு முகாம்களில் உள்ள மக்களும் சொந்த இடங்களுக்கு போய் சந்தோஷமாக வாழவேணும்.

விடுவிக்கப்பட்டிருக்கும் இந்த மக்களின் சந்தோஷத்தை விரைவில் முகாமில் இன்னமும் வாழும் மக்களும் அனுபவிக்க வேண்டும் என் பதே அனைவரதும் பேரவாவாக உள்ளது.

# திரை விமர்சனம்



# ஈரம்

நடிப்பு: ஆதி, சிந்து மேனன், நந்தா, சரண்யாமோகன்
ஒளிப்பதிவு: மனோஜ் பரமஹம்ஸா
இசை: எஸ் தமன்
இயக்கம்: அறிவழகன்
தயாரிப்பு : ஷங்கர்

தமிழில் புதுமுயற்சி...மிரட்டலான படம் என்று இந்தப் படத்தைச் சொல்ல முடியாது. பல ஆங்கிலப் படங்களில் நாம் ஏற்கனவே பார்த்த விஷயங்கள் தான்.ஆனால் நம்பகமான கதைப் பின்னணி மற்றும் நல்ல உருவாக்கம் மூலம் ஈரம் நம்மையும் நனைத்துவிடுகிறது.சிந்து மேனனின் கல்லூரித் தோழர் ஆதி. நட்பு கவிதையான சில சந்திப்புக்களுக்குப் பின் காதலாகிறது. அடுத்த கல்யாணத்துக்குப் போகும் போது சிந்துவின் தந்தை ஆதியின் வேலையைக் காட்டி பெண்தர மறுக்க,நந்தாவுக்கு கழுத்தை நீட்டுகிறார் சிந்து.

சந்தேகப் பேர்வழியான நந்தாவிடம் சீரழிகிறது சிந்துவின் வாழ்க்கை. அக்கம்பக்கத்து மனிதர்களும் அவரவர் சொந்த இலாபங்களுக்காக சிந்துவைப் பற்றிய தங்கள் கற்பனைகளை நந்தாவிடம் போட்டுக்கொடுக்க,ஒருநாள் சைக்கோத்தனத்தின் உச்சத்துக்கு போய் கொன்றே விடுகிறார் நந்தா.

இந்தக் கொலைக்குப்பின் , பழிவாங்கலை ஆரம்பிக்கிறது சிந்துவின் ஆவி. அதற்கு தண்ணீரை மீடியமாகத் தேர்ந்தெடுக்கிறது. அடுத்தடுத்து நிகழும் நூதன மரணங்கள் சின்னப் பசங்களைப் நிஜமாகவே டென்ஷனாக்கும் சமாச்சாரம். மனதுக்குள் பெரும் ஆச்சரியக் குறிகளை எழுப்பும் அளவு திறமையாக இறுக்கமாகப் படமாக்கப்பட்டுள்ளன.

ஒரு பெண் சமையலறைக் குழாயைத் திறக்கிறார். தண்ணீர் வரவில்லை.சலிப்புடன் மிக்சியைப் போடுகிறர்.மின்சாரம் இல்லை.அப்போது போன் ஒலிக்கிறது.போய் எடுத்துப் பேசுகிறார்.அவர் பேசிக் கொண்டிருக்கும்போதே தண்ணீர் வருகிறது.ஸிங்க் நிரம்பி, ஒரு கரண்டிநுனி வழியாக சமையலறையில் வியாபித்து ஹோல்வரை பரவுகிறது.சிலநொடிகளில் மின்சாரமும் வந்துவிடுகிறது.தண்ணீர்,மின்கம்பி அறுத்திருககும் ஒரு பகுதிக்கும அந்தப் பெண்மணி பேசிக்கொண்டிருக்கும் இடத்துக்கும் பரவுகிறது. தண்ணீர் விரைந்து அந்தப் பெண்ணின் குதிகாலை முத்தமிட... ஆ...! அடுத்த நொடி மரணப்படுக்கையில் பிணமாக அந்தப்பெண்! தியேட்டர் பாத்ருமில் 'அருவமாக' ஆனால் தண்ணீரில் கால்தடங்கள் பதிய ஆவி நடந்துபோகும் காட்சிநிஜமாகவே மிரட்டல். ஆனால் இடைவேளைக்குப் பிறகு ஆவி ஆராய்ச்சி மையம் என்றெல்லாம் இழுக்கும்போது சற்று சோர்வு தட்டிவிடுகிறது. சிந்துமேனனின் ஆவி தங்கை வடிவில் வந்திருப்பதை முதன் முறையாக ஆதி உணரும் அந்தக் காட்சி மனதைச் சில்லிட வைக்கிறது. படம்முழுக்க ஈரம் ஒரு பாத்திரமாகவே பயணிக்கிறது. அதை இயல்பாகக் காட்ட முயற்சித்திருப்பது ஒரு த்ரில்லர் கவிதை. ஆதி... தமிழுக்கு அட்டகாசமான புதிய நாயகன் கிடைத்துள்ளார்.வாய்ப்புக்களை மிகச் சரியாகப் பயன்படுத்திக்கொண்டால் சூர்யாவையே ஓரம்கட்டிவிடும்.

அசாத்திய திறமைசாலி. வசன உச்சரிப்பிலும் அத்தனை நேர்த்தி. தென்னிந்திய சினிமாவில் பெரிய உயரங்களைத் தொடப்போகும் இளைஞர் என்பதற்கான அத்தனை அறிகுறியும் தெரிகிறது.

பக்கா திருச்சி மிடில்கிளாஸ் பெண் வேடத்தில் அச்சாகப் பொருந்துகிறார் சிந்துமேனன். நந்தா கொடுத்த காபியைக் குடித்துவிட்டு, அதில் விஷம் கலந்திருபதை அறிந்ததும் சோர்வு, ஆற்றாமை, உயிரைப்பிரியும் வலி அனைத்தையும் ஒரே ப்ரேமில் அவர் காட்டியிருக்கும் விதம் முதல் தரம்.நந்தாவிடமிருந்து மிக மிக இயல்பான வில்லத்தனம் வெளிப்பட்டுள்ளது. சைக்கோ வில்லத்தனத்தை ரகுவரனுக்குப் பிறகு இத்தனை சிறப்பாகக் காட்டியிருப்பவர் நந்தா தான்!தர்மனின் இசையில் பாடல்கள் பெரிதாக இல்லை. ஆனால் பின்னணி இசை கைகொடுத்துள்ளது.மனோஜ் பரமஹம்ஸாவின் ஒளிப்பதிவு இயக்குநருக்கு பெரும் பலம்.கிராமங்களில் பாட்டிகள் சொல்லும் பேய்க்கதைதான்...ஆனால் அதையே நவீன உத்திகளுடன் அழுத்தமாகக் காட்சிப்படுத்தி முதல் படத்திலேயே வெற்றிபெற்றுள்ள அறிவழகனுக்கு வாழ்த்துக்கள்!



## விக்ரமுடன் ஜோடி சேரும் சுவாதி



வெற்றிகரமா ஓடிய சுப்பிரமணியபுரம் படத்தில் கதாநாயகியாக நடித்தவர் சுவாதி.கண்கள்இரண்டால் உன் கண்கள் இரண்டால் என்னைக்கட்டி இழுத்தாய் இழுத்தாய் என்ற பாட்டுக்கு இவர் காட்டிய விழி அழகு இளசுகளின் இதயாங்களை வேலாய் குத்தியது.

அப்படத்துக்குப் பின் தமிழில் பெரிய ரவுண்ட் வருவார் என எதிர்பார்த்தனர்.ஆனால் ஆந்திராவில் ஒதுங்கினார்.

தமிழ்ப்பட வாய்ப்புக்கள் நிறைய வந்தன. ஆனால் கதைபிடிக்காததால் மறுத்தார். பெரிய ஹீரோக்களுடன் ஜோடி சேர தூதுவிட்டுக்கொண்டிருந்தார். அவர் ஆசை இப்போது நிறைவேறியிருக்கிறது. விக்ரம் நடிக்கும் புதிய படத்தில் இவருக்கு ஜோடியாகிறார்.இந்தப்படத்தை செல்வராகவன் இயக்குகிறார்.

## சித்திரை ஸ்பெஷலாக வரும் விஜய்யின் 50 ஆவது படம் 'சுறா'



விஜய்யின் ஐம்பதாவது படமான சுறாவை அழகர்மலை எஸ்.எஞ். ராஜ்குமார் இயக்குகிறார். மணிசர்மா இசையமைக்கிறார்.தமன்னா நாயகியாக நடிக்கிறார். வடிவேலுவும் உண்டு.

இந்தப் படத்தில் விஜய் மீனவர் வேடத்தில் நடிக்கிறார். எதிர்வரும் 18 ஆம்திகதி முதல் படப்பிடிப்பு ஆரம்பமாகிறது.

ஏப்ரல் 14 ஆம்திகதியன்று சித்திரை ஸ்பெஷலாக வருகிறது சுறா.


## ஹெலிகொப்டர் விபத்தில் உயிர்தப்பிய பரத்



அமெரிக்காவுக்குப்போயிருந்தபோது, ஹெலிகொப்டர் விபத்தில் தான் உயிர் தப்பிய கதையை பார்ப்பவர்களிடமெல்லாம் சொன்னது போதாதென்று பத்திரிகையாளர்களை அழைத்துச்சொல்லி வருகிறாராம் பரத்.இவர் அமெரிக்காவுக்கு சுற்றுப்பயணம் போயிருந்த போது ஹெலிகொப்டரில் பறந்தபடி ஹட்சன் நதியைப் பார்த்தாராம்.அப்போது இவரை இறக்கிவிட்டு அதே ஹெலி கொப்டர் மீண்டும் பறந்ததாம். பயணிகளை ஏற்றிக் கொண்டு எதிர்பாராதவிதமாக ஒரு விமானத்துடன் மோதி சுக்கு நூறாகச் சிதறியதாம் அந்தஹெலிகொப்டர் அங்கேயே 10 பயணிகளுடன் உடல் சிதறிப் பலியானார்களாம்.

கொஞ்சம் தாமதித்திருந்தாலும் என் கதி என்னவாகியிருக்கும்... நினைக்கவே நெஞ்சம் நடுங்குகிறது என பத்திரிகையாளர் சந்திப்பில் நடுங்கிக் காட்டினாராம் பரத்.

## மேடையில் சிம்பு செய்த வம்பு



இயக்குநர் அமீர் கதாநாயகனாக நடித்திருக்கும் யோகி படத்தின் ஆடியோ வெளியீட்டு விழாவில் பேசிய சேரன், "யோகி படத்தை நான் முழுவதுமாக பார்த்துவிட்டேன்.இங்கே உள்ள நடிகர்கள் வருத்தப் படக்கூடாது.ஒருசில காட்சியில் எந்தக் கதாநாயகனும் செய்ய முடியாததை அமீர் செய்திருக்கிறார்'' என்று போகிற போக்கில் ஒரு தகவலை கொளுத்திப்போட அதுமேடையில் இருந்த ஜெயம் ரவி, சிம்பு, ஜே.கே. ரித்திஷ் எம்.பி உள்ளிட்டவர்களை உசுப்பி விட்டு விடும் என அனைவரும் எதிர்பார்த்தனர்.

அப்போது பேசுவதற்காக மைக்கைப் பிடித்த சிம்பு , நல்ல இயக்குநர் கிடைத்தால் நடிப்பது ஈஸி. ஆனால் இயக்குவது , நடிப்பது இரண்டுமே கஷ்டமில்லை என்று கூறியதுடன் தன் பாங்குக்கு பருத்திவீரன் படம் முழுக்க நடிகர் கார்த்தி மூலம் இயக்குநர் அமீர்தான் தெரிந்தார்.அந்த அளவிற்கு பிறரையே இயக்கத் தெரிந்தவர்... இதில் எப்படியெல்லாம் நடித்திருப்பார் என கற்பனை பண்ண முடிகிறது என மேடையில் இல்லாத நடிகர் கார்த்தியை வம்புக்கு இழுத்து அமர்ந்தார்.

## அசின் –டோனி 'லவ்'?



இதுவரை லட்சுமிராய் பக்கம் வீசிக்கொண்டிருந்த டோனி காற்று இப்போது அசின் பக்கம் வீச ஆரம்பித்துவிட்டது என்கிறார்கள். பொலிவுட்டில் பரபரப்பாய்.லட்சுமிராய்க்கும் தனக்கு இனம்புரியாத நெருக்கம் என்றும் அது காதலா இல்லையா தெரியாது என்றெல்லாம் தத்துவஞானிகளுக்கு மட்டுமே புரியும் வகையில் பேசிவந்தார் டோனி.

இந்நிலையியல் அசினுடன் ஒரு விளம்பரப் படத்தில் நடித்தாராம் டோனி. அவ்வளவுதான். அன்று முதல் பிஸின் மாதிரி டோனியுடன் ஒட்டிக்கொண் டாராம் அஸின்.இருவரும் செல்லில் மணிக்கணக்கில் பேசுவது என்று தொடங்கிய பழக்கம், பிறந்த நாளுக்கு அசினை தனியாக அழைத்து விருந்து கொடுக்கும் அளவுக்கு முன்னேற்றம் கண்டது.

அத்துடன் நிற்கவில்லையாம் இப்போது.இந்த நெருக்கம் இருவரையும் காதலில் பிணைத்து விட்டதாக பரபரப்புடன் பேசுகிறார்கள் பொலிவுட்டில்.

## வெற்றி நமதே





இயக்குநர்

உலகத் தொலைக்காட்சி முதல் முறையாக மிகப் பிரமாண்டமான பொருட்செலவுடன் உள்நாட்டிலும் , வெளிநாடுகளிலும் படமாக்கப்படும். தமிழ் ,சிங்கள கலாசாரங்களை மையமாகக் கொண்ட தமிழ் திரைப்படம் தான் "வெற்றி நமதே" திரைப்படம்.

விஜய அபயசேகரவால் தயாரிக்கப்படும் இப்படத்தை வீடியோ கலாமிலியின் மாணிக்கம் சிவமூர்த்தி இயக்குகிறார்.

தமிழ்,சிங்கள,தென்னிந்திய கலைஞர்கள் நடிக்கும் இப்படத்தில் கதாநாயகனாக துசிந்தனும், கதாநாயகியாக மதுரேகாவும் நடிக்கவுள்ளனர்.

இலங்கை,இந்தியா, லண்டன்,கனடா ஆகிய இடங்களில் படமாக்கப்படவுள்ள இப் படத்திற்கான முதல்கட்ட படப்பிடிப்பு செல்வச்சந்நிதி ஆலயத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# CBA கற்கைநெறியில் சித்தியடைந்தால் நிதி நிறுவனங்களில் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இளைஞர், யுவதிகள் நிதி நிறுவனங்களில் வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கான கற்கைநெறியை வழங்குவதற்கு ஐ.பி.எஸ்.எல். (Institute of Bankers of SriLanka) நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதாக யாழ்.வந்த அந் நிறுவனத்தின் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ள ஐ.பி.எஸ்.எல். (Institute of Bankers of SriLanka) நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ஷா எம் அபயரட்ண, பரீட்சைகள் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் சி.ஜே.பெர்னாண்டோ, கற்கைநெறிகள் பணிப்பாளர் திருமதி விருளி டி சில்வா ஆகியோர் நேற்று முன்தினம் யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையில் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தினர்.

இம் மாநாட்டில் ஐ.பி.எஸ்.எல். நிறுவன யாழ்ப்பாண இணைப்பாளரான மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரட்ணமும் கலந்துகொண்டார்.

இதில் ஐ.பி.எஸ்.எல். நிறுவனத்தினால் நடத்தப்படும் வங்கியியலாளர் கற்கைநெறி தொடர்பில் பணிப்பாளர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் இங்கு தொகுத்து தரப்படுகிறது.

தென் பகுதியிலிருந்து வங்கிகள், நிதி நிறுவனங்கள் மற்றும் கம்பனிகள் தற்போது யாழ்ப்பாணத்தில் தமது சேவைகளை ஆரம்பித்துள்ளன.

இந் நிறுவனங்கள் யாழ்ப்பாண இளைஞர்,யுவதிகளை தமது ஆளணியினராக இணைத்துக் கொள்கின்றன.

இதனைக் கருத்திற் கொண்டு யாழ்ப்பாண இளைஞர், யுவதி தொழிற் தகைமையை அடைவதற்கும் வேலைவாய்ப்புகளில் முன்னுரிமையைப் பெற்றுக்கொள்வதற்குமாக ஐ.பி.எஸ்.எல். நிறுவனம் தனது கற்கை நெறிகளை யாழ்ப்பாணத்தில் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.


பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் வங்கியியல், நிதியியல் துறைகளில் சிறந்த தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கு ஐ.பி.எஸ்.எல்.நிறுவனத்தினால் வழங்கப்படும் வங்கியியல் கற்கைநெறி உதவும்.

பாடசாலைகளில் தற்போது கல்வி கற்கும் மாணவர்களும் இக் கற்கைநெறியை தொடர்வதன்மூலம் பாடசாலைக் கல்வியை முடிக்கும் போது மேலதிகமாக தொழில் தகைமையையும் பெற்றுக்கொள்வார்கள்.

நாங்கள் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு சென்று பேராசிரியர்கள் மற்றும் பீடாதிபதிகளைச் சந்தித்து நிதியியல்துறை சார்ந்த கற்கைநெறிகள் தொடர்பில் ஆராய்ந்தோம்.

அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிதியியல் துறையில் டிப்ளோமா கற்கைநெறிகளை ஆரம்பிக்க பேராசிரியர்கள் சம்மதம் தெரிவித்தனர்.

இதற்காக டிப்ளோமா கற்கைநெறிகளை



கற்பிப்பதற்கான விரிவுரையாளர்களுக்கு ஐ.பி.எஸ்.எல். நிறுவனம் பயிற்சிகளை வழங்கும்.

யாழ்ப்பாணத்தில் 30 வருடங்களாக ஐ.பி.எஸ்.எல். நிறுவனத்தினால் நடத்தப்படும் CBA கற்கைநெறியின் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன.

## யாழ்.இளைஞர்,யுவதிகளுக்கு தொழில் தகைமை வழங்க ஐ.பி.எஸ்.எல் நிறுவனம் தயார்

குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையிலும் ஐ.சி.ஆர்.சி ஊடாக கப்பல் மூலம் பரீட்சை வினாத்தாள்கள் அனுப்பப்பட்டு வலயக் கல்விப் பணிப்பாளர்களின் உதவியுடன் பரீட்சையை நடத்தியுள்ளோம்.

இங்கிலாந்து கல்வித்தரத்திற்கு அமைவாக பரீட்சை வினாத்தாள்கள் தயாரிக்கப்பட்டு இங்கிலாந்து பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி உறுதிப்படுத்தப்படும்.

CBA கற்கைநெறி பட்டப்படிப்புக்கு ஒப்பானது என்பதனால் இப் பரீட்சையில் சித்தியடைந்ததும் பட்டப்பின் படிப்புகளை மாணவர்கள் தொடர முடியும்.

அத்துடன் இங்கிலாந்து நொதேர்ன்பியா பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடனேயே CBA, DEF கற்கைநெறிகள் வழங்கப்படுகின்றது.

இதில் முக்கியமான பாடநெறிகளைக் கற்று பரீட்சையில் சித்தியடைந்தால் கல்வித் தகைமையைப் பெறுவதுடன் அடுத்து இரண்டாவது கட்டமான விருப்பத்திற்குரிய பாடநெறிகளைத் தொடர்வதன் மூலம் தொழில் தகைமையையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இங்கிலாந்து மான்செயார் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டப்படிப்பைத் தொடரும்போது CBA பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் முதல் இரண்டு வருடப் பரீட்சைக்கும் தோற்றாமல் இறுதிவருடப் பரீட்சைக்குத் தோற்றி பட்டத்தை பெற்றுக் கொள்ளமுடியும்.

இதன்மூலம் காலத்தை மீதப்படுத்தி நேரடியாக வெளிநாட்டு பட்டம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துடன் CBA கற்கைநெறியைத் தொடர்வதன் மூலம் யாழ்ப்பாண இளைஞர் , யுவதிகள் கொழும்பு , இங்கிலாந்து என செல்லாமல் யாழ்ப்பாணத்திலேயே வெளிநாட்டு கல்வித் தரத்திலான பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும்.

காலத்திற்குக் காலம் கல்வித்தரத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப ஐ.பி.எஸ்.எல். நிறுவனமும் கல்வித்தரத்தை மாற்றியமைக்கின்றது.

அத்துடன் கற்கைநெறிகளுக்குரிய கையேடுகள், வினாத்தாள்கள், விடைத்தாள்களின் மாதிரி என்பன மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

ஐ.பி.எஸ்.எல். நிறுவனத்தின் இணையத்தளத்திலும் பாடக்குறிப்புக்கள் வழங்கப்படுவதால் சகல மாணவர்களும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

CBA கற்கைநெறியில் முதலாவது பரீட்சையில் சித்தியடைந்திருந்தாலும் வேலைவாய்ப்புக்காக நேர்முகப் பரீட்சைகளில் புள்ளிகள் வழங்கப்படும்.

இக்கற்கைநெறி 8 மாதங்களில் பூர்த்தியடைவதனால் குறைந்த காலத்தில் குறைந்த செலவில் பட்டம் ஒன்றைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு மாணவர்களுக்கு கிடைக்கின்றது.

அத்துடன் வேலைவாய்ப்புக்கான திறன், அறிவு மற்றும் அனுபவம் என்பனவும் குறைந்த காலத்தில் கூடுதலாகக் கிடைக்கின்றன.

இக் கற்கைநெறியின் ஊடாக பட்டம் பெற்ற மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெறும்போது தமது நிறுவனத்தில் அன்றாடம் தோன்றும் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக் கூடிய திறன்உள்ளவர்களாக இருப்பர்.

இங்கிலாந்து வங்கியியல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சமமாக ஐ.பி.எஸ்.எல். நிறுவனத்தால் கற்கைநெறிகள் வழங்கப்படுவதனால் தொடர்பாடல், ஆங்கில அறிவு., கணனி மற்றும் தொழில்தகைமை என்பன மாணவர்களுக்கு கிடைக்கின்றது என ஐ.பி.எஸ்.எல்.நிறுவனப் பணிப்பாளர் தெரிவித்தார்.

# எதிர்வரும் நாட்களில் இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படலாம்

## வளிமண்டலத் திணைக்கள பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடுமென இலங்கை வளிமண்டலவியல் திணைக் களத்தின் பணிப்பாளர் ஜீ.பி.சமரசிங்க தெரி வித்துள்ளார்.

எதிர்வரும் மாதங்களில் இலங்கைக்கு ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு விளக்கமளிக் கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டு ளார்.

இடியுடன் கூடிய மழை, கடும் காற்று, மண் சரிவு,வெள்ளம், இடி மின்னல் மற்றும் சுழற்காற்று போன்ற இயற்கை அனர்த்தங் கள் ஏற்படக்கூடுமென எச்சரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் தாழமுக்க நிலை காணப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள் ளார்.

இதன் காரணமாக,பொதுமக்கள் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் விழிப்புடன் இருக்க வேண்டுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (ஓ-6)

# புலிகளின் மாவீரர் குடும்ப விபரங்கள் அடங்கிய ஆவணங்கள் தொப்பிகலையில் மீட்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டம் தொப்பிகலை பிரதேசத்திலுள்ள நாரக்கமுல்லையில் விடுத லைப் புலிகளின் மாவீரர் குடும்ப விபரங்கள் மற்றும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய முக்கிய ஆவணங்கள் விசேட பொலிஸ் குழு வொன்றினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வவுனியா இடைத்தங்கல் முகாம் ஒன்றில் கைதாகிப் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினரிடமிருந்து கிடைத்த தகவலையடுத்தே இவை கண்டுபிடிக்கப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் அந்தப் பகுதிக்கு சென்றிருந்த பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினர் மறைவிடம் ஒன்றில் புதைக்கப்பட்டிருந்த பெருந்தொகையான இந்த ஆவணங்களில் , விடுதலைப் புலிகளின் மாவீரர் குடும்ப விபரங்கள் , சுமார் 10 ஆயிரம் பயற்சி பெற்ற அங்கத்தவர் விபரம், வங்கி மற்றும் நிதி தொடர்பான ஆவணங்களுடன் தகவல் கருவிகளும் தமிழில் மொழிபெயர்க் கப்பட்ட லண்டனிலிருந்து வெளியாகும் ஜேன்ஸ் டிபென்ஸ் பிரதியும் காணப்பட்டதாக பொலிஸ் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

இதுதொடர்பான மேலதிக விசாரணை களை நடத்தும் பொறுப்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைக்கப் படவுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்ற னர். (ஓ-6)

## சமய அறிவு விருத்திப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தாவடி தெற்கு ஸ்ரீ வட பத்திரகாளி அம்மன் ஆலயத்தினால் கேதார கௌரி நோன்பை முன்னிட்டு நடத்தப்படவுள்ள சமய அறிவு விருத்திப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை ஆலயத்தில் இலவசமாக பெற்றுக் கொள்ள முடியும் எனவும் விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 21 ஆம் திகதி எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பரீட்சார்த்தி பரீட்சையின் போதும் பரிசில் பெறும் போதும் விண்ணப்பத்தின் பிரதியை காண்பிக்க வேண்டும் எனவும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஒக் டோபர் மாதம் 17 ஆம் திகதி தீபாவளி தினத்தன்று ஆலய மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக தேவஸ்தான ஆதீனகர்த்தா நா. சசிதரசர்மா அறிவித்துள்ளார். (ஓ-4)

## சர்வதேச முதியோர், மாற்று ஆற்றலுள்ளோர் தின விழாவும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விழிப்புனர்வற்றோர் சங்கம், கல்வித்துறை மற்றும் தொழிற்துறை ஆகியன இணைந்து யாழ். மாவட்டத்தில் சர்வதே முதியோர், மாற்று ஆற்றலுள்ளோர் தின விழாவினையும் கண்காட்சியையும் ஒக்ரோபர் மாதம் 10, 11 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியில் நடாத்தவுள்ளன.

மேற்படி நிகழ்வில் தொழில் திறமைகளையும் கைவினைப் பொருட்களையும் காட்சிப்படுத்தல், மாற்று வலுவுள்ளோருக்கான விளையாட்டு நிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன. (ஓ-7)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடந்து 10 தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறமும், 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## நிதி ஒதுக்கீடு

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என். ஸ்ரீகாந்தன் 2009 ஆம் ஆண்டுக்கான தமது பன் முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலி. கிழக்கு கோப்பாய் பிரிவுக்கு தளபாடக் கொள்வனவுக்காக ஒருலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார். (ஓ-134)

## கசிப்பு விற்பனையால் மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் மேற்கில் மீண்டும் கசிப்பு விற்பனை அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்து இப்பகுதி மக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இவ் விற்பனையை தடை செய்வார்களா என்று எதிர்பார்க்கின்றார்கள். (ஓ-134)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையின் நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாசாலை மண்டபத்தில் அதிபர் கா. சசிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் கொமர்ஷல் வங்கி முகாமையாளர் இ. குலேந்திரன் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

மேலும் நிகழ்வில் ஆசியுரையை மருதடி விநாயகர் தேவஸ்தான பிரதமகுரு ப. ஜெயக்குமாரக் குருக்கள் வழங்கவுள்ளதுடன் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. சே. சிவசண்முகராஜா வழங்கவுள்ளார். அத்துடன் மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி வசந்தராணி குலேந்திரன் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ஓ-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 70 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 40 |
| தக்காளி | 40 | 50 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 20 | 40 | 40 |
| கோவா | 110 | 120 | -- |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 30 | 40 | 25 |
| புடோல் | 40 | 50 | 30 |
| வாழைக்காய் | 30 | 40 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40-60 |
| பெரிய வெங்காயம் | 35-80 | 80 | 50 |
| பாகற்காய் | 60 | 70 | 40 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 30 |
| கரணைக் கிழங்கு | 35 | 45 | 50 |
| பயிற்றங்காய் | 50 | 60 | 30 |
| லீக்ஸ் | 70 | 80 | 100 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 30 | 40 | 50 |
| முருங்கைக்காய் | 70 | 80 | 60 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 200 | 220 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 35 | 30 | 35 |

## வாரம் ஒரு தகவல்

### இரவல் பேனா

"சேர்! ஒரு நிமிடம் உங்க பேனாவைத் தர்றீங்களா?"

"ம்... இந்தாங்க"

"என்ன சேர் இது... மூடியைக் கழற்றி விட்டு பேனாவை மட்டும் கொடுக்கிறீங்க?"

"அது என் பழக்கம் சேர்"

"ஜப்பானில் ஒரு புதுவிதமான பேனா விற்பனைக்கு வந்திருக்கிறதாம். கேள்விப்பட்டீங்களா?"

"இல்லையே!."

"அது எப்படியென்றால்... பேனாவின் மேல் பக்கத்தில் வட்டமான அளவில் பற்றரியால் இயங்கக்கூடிய சின்ன மின் விசிறி உள்ளதாம்."

"எதற்கு அந்த மின்விசிறி?"

"எழுதிக் கொண்டிருக்கும்போது அந்த மின்விசிறி சுழலும்! சிகரெட் புகையை விரட்டி அடித்துவிடும். புகை யில்லாத காற்றை நாம் சுவாசிக்கலாம்."

"அதாவது... பக்கத்திலிருப்பவர்கள் புகைப்பிடித்தாலும் அந்தப்புகை நம்முடைய முகத்துக்கு நேராக வரா மல் இது காப்பாற்றும் அப்படித்தானே!"

"அது மட்டுமல்ல சேர்! பேனா இரவல் வாங்கினால் அதை அப்படியே எடுத்துக் கொண்டு போய் விடுபவர்களும் அதிகம். அதனால் நான் எப்பொழுதும் முன் ஜாக்கிரதையாக மூடியைக் கழற்றிக் கொண்டு பேனாவை மட்டும்தான் மற்றவர்களுக்குக் கொடுப்பேன். அதனால் என்ன ஆச்சு தெரியுமா?"

"என்ன ஆச்சு?"

"இதுவரைக்கும் 234 பேனா மூடி என்னிடம் சேர்ந்து இருக்கிறது"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இராசி பலன்

20.09.2009
(புரட்டாதி 04, ஞாயிற்றுக்கிழமை)
துதியை முன்னிரவு 10.14 மணிவரை
அத்தம் பிற்பகல் 2.56 மணிவரை
இராகுகாலம் 4.33 - 6.03 மணிவரை
சுபநேரம் 9.03 - 10.33 மணிவரை
அமிர்த சித்தம்

| | |
|---|---|
| மேடம் | மனமகிழ்ச்சி, காரிய சித்தி, உடல் நலம், விருந்துபசாரம். |
| இடபம் | சிறுவியாதி, தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, தனவிரயம். |
| மிதுனம் | மனச்சஞ்சலம், நல்ல முயற்சி, உறவினர் சந்திப்பு, சுபசெலவு. |
| கடகம் | பிரயாண நன்மை, சகோதரர் வழி நன்மை, அந்நியர் சந்திப்பு, தன வருவாய். |
| சிங்கம் | அமைதிக்குறைவு, முயற்சி தாமதம், தனவிரயம், மாதர் நட்பு. |
| கன்னி | தெய்வ சிந்தை, விருந்துபசாரம், சயன சுகம், உறவினர் வருகை. |
| துலாம் | சுபசெலவு, காரிய அலைச்சல், சயன சுகக்குறைவு, மனஸ்தாபம். |
| விருச்சிகம் | பெருமையடைதல், காரிய அனுகூலம், தனவருவாய், தேகநலன். |
| தனுசு | தொழில் சிந்தை, உறவினர் வருகை, காரிய நன்மை, நல்ல செய்தி. |
| மகரம் | ஆன்றோர் சந்திப்பு, பிரயாணம், புதிய முயற்சி, கட்டுப்பாடு. |
| கும்பம் | வாகன பயம், வீண் பகை, காரிய தாமதம், போசன சுகம். |
| மீனம் | செல்வாக்கு, களஸ்திர நன்மை, உடல் நலம், போசன சுகம். |

வளவன்

## கிடைக்காத விடிவு

வெந்து
போகும் வாழ்க்கையில்
பணம்
வேஷம் போட்டு
நாடகமாடுகிறது

ஈரமில்லாத
மனங்களில் ஜனநாயகம்
தோற்கடிக்கப்பட்டு
நெஞ்சுவர்களில் மட்டும்
சுலோகமாயிருக்கிறது

நிம்மதியை
தொலைத்த அகதிப் பிஞ்சுகளின்
கல்வியும்
கொடுக்க முடியாத
கடனாகிப் போனது

தாயையே
முதியோர் இல்லத்துக்கு
அனுப்பும் பிரபஞ்சத்தில்
அன்பும் அநாதையாகிப் போனது

சரித்திரங்களை
படைத்திடும் மனிதர் நடுவே
ஏனோ சாதி மட்டும்
தூர நிற்கிறது


கடவுளே...
மரணத்தை விட
கொடுமையானது - மனித மனங்கள்!

ஜே.எஸ். ராஜ்
யாழ். பல்கலைக்கழகம்

# முன்னேறுவதற்கான வழி என்ன?

மனிதர்களாய் பிறந்த ஒவ்வொருவருக்குமே, வாழ்க்கை யில் முன்னேற வேண்டும் என்ற துடிப்பு இருக்கும். சிலருக்கு கடைசி மூச்சு வரை கூட இந்த எண்ணம் இருக்கும். முன் னேறுவதற்கான வழிகளைக் கற்றுக் கொடுக்க ஏராளமான புத்தகங்கள், வகுப்புகள், தனி படிப்புகள் இருந்தாலும், எல் லோருக்கும் அவை பொருந்துமா என்பது கேள்விக்குறியே.

''பிரைடே'' என்ற துபாய் பத்திரிகையில், எலிசபெத் என்ற எழுத்தாளர் 10 வழிமுறை களை எழுதியுள்ளார் அவையா வன,



☞ உயர் பதவியை அடைய, போட்டி மனப் பான்மை தேவை. போட்டி என்பது மற்றவர்களை போட்டுக் கொடுத்து முன்னுக்கு வரு வது அல்ல. உங்கள் திறமையை அதிகரித்து தொடர்ந்து அதை நிரூபித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

ஒரு கட்டத்தில் உங்கள் திறமை இவ்வளவு தான் என்ற தீர்மானத்திற்கு வர வேண்டிய நிலை ஏற்படும். அதுதான் உங்கள் எல்லைக் கோடு. அது என்ன என்பதை கண்டுபிடிக்கும் வரை தொடர்ந்து உழைக்க வேண்டும்.

☞ உயர் பதவியை அடைய வேண்டும் என்ற வேகத்தில் நான்கு கால் பாய்ச்சல், எட்டு கால் பாய்ச் சலில் செல்வதை விட ஒவ்வொரு வேலையையும் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும்.

இப்படிச் செய்தால் அனைத்து வேலைக ளிலும் நீங்கள் அத்துப்படி ஆகி விடுவீர்கள். உச்சப் பதவியில் அமரும் போது, உங்கள் கீழ் பணியாற் றும் யாரும் உங்களை எளிதில் ஏமாற்றி விட முடியாது.

☞ ஒரு வேலையை முழுதுமாகக் கற்று முடிக்கும் போது, உங்கள் தன்னம்பிக்கை உயரும். தொடர்ந்து அதே பணி யைச் செய்தபடி இருந்தால் அந்தப் பணியை வேகமாகச் செய்து முடித்து, "அடுத்து என்ன வேலை செய்யலாம்? என்று சிந்திக்கத் தொடங்கி விடுவீர்கள். இதுவே முன்னேற்றத் துக்கான அடிப்படை.

☞ உங்கள் வீட்டை நீங்கள் எவ்வளவு நேசிக் கீறர்களோ, அந்த அளவு அலுவலகத்தையும் நேசிக்க வேண்டும்.

உங்கள் வீட்டின் மூலை முடுக்குகளை நீங்கள் அறிந்து வைத்துள்ளது போல் அலு வலகத்தையும் அறிய வேண்டும். அலுவ லகத்தை உங்கள் வீடாக நினைத்துக் கொண்டால் வீட்டை அழகாக நிர்வகிப்பது போல அலுவலகத்தையும் அழகாக நிர்வகிப்பீர்கள்.

☞ அனைத்தையும் அறிந்து கொண்டு நடு நிலையுடன் செயல்பட்டு நீண்ட நேரம் அலு வலகத்தில் அமரும் பழக்கம் உள்ளவராக இருந்தால் நீங்கள் நினைத்தபடி வேலைகள் நடக்கும். அலுவலகக் கட்டுப்பாடுகள் கூட உங்களிடம் மண் டியிடும்.

☞ நீங்கள் தற்போது பணியாற்றும் இடத்தை தக்க வைத்துக் கொள்ள நிறைய பொறுமை, சகிப்புத்தன்மை தேவை. இதைக் கைக் கொண்டால் உங்களை அனைவரும் மதிப் பர். உங்களை நம்பி வேலைகள் தானாக வந்து சேரும்.

☞ எங்கு பணி புரிந்தாலும் நீங்கள் நீங்க ளாகவே இருங்கள். அப்போது தான் உங்கள் தனித்துவம் வெளிப் படும்.


☞ இந்த வேலை போரடிக்கிறது ; வேறு வேலை பார்க்கலாமா... என்று, நிலையற்ற வகையில் சிந்திக்காதீர்கள். உங்களால் செய்ய முடிந்த பணியைத் தான் நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் திறமைக்கு மீறிய வேலையை நீங்கள் செய்யவில்லை. போரடிக்கும் வேலையை வேகமாகச் செய்து முடித்தால் அடுத்த வேலை தானாகவே உங்கள் மடியில் வந்து விழும்.

☞ இது முடிந்து விட்டது... அடுத்து என்ன... என்று பரபரப்பாக வேகமாக ஓடிய படியே இருந்தாலும், ஒரு நாள், மீண்டும் பழைய இடத்திற்கே தான் வரவேண்டி இருக் கும். இதற்கு ஏன் வாழ்க்கையை அநாவசியமாக 'டென்ஷன்' படுத்திக் கொள்கிறீர்கள்? நிதானமாக, கவனத்துடன் தற் போதைய பணியைச் செய்து கொண்டே இருந்தால், நிலையான முன்னேற்றம் ஏற்படும்.

☞ மற்றவர்கள், ''டென்ஷனுடன்'' ஓடுவ தைப் பார்த்து ரசித்தபடி அமர்ந்திருங்கள். நீங்கள் 'ரிலாக்ஸ்' ஆகி விடுவீர்கள்.

# இவையே கேட்பேன்



கண்ணதாசன்

கடவுளை நேரில் பார்த்தால் என்ன கேட்பீர் கள் என்று கவியரசர் கண்ணதாசனிடம் கேட் கப்பட்டது. அதற்கு கண்ணதாசன் கவிதையில் சொன்னது:-

பரபரப் பாகப் பறந்து செல் வாரும்
சுறுசுறுப் பாகத் தொடர்ந்து செல் வாரும்
அது இது என்றே அலையும் பேர்களும்
மதுமங் கைஎன மயங்கிநிற் பாரும்
மாளிகை எழுப்ப மனந்துடிப் பாரும்
மண்குடில் விளக்கில் வாழும் மனிதரும்
பள்ளியை நோக்கிப் பறக்கும் பாலரும்
படம்நா டகம்எனப் பார்க்கும் ரசிகரும்
ஐயா பசியென அலறும் நொண்டியும்
வெய்யில் கருதாது வேலை செய் வார்களும்
பரந்த உலகின் பங்குதா ரர்கள்
மானிட உலகின் மகத்துவ மெல்லாம்
ஜனனம் மரணத்தை சந்திக்கும் வரையே!
ஆயினும் இவர்கள் அத்தனை பேரும்
காலகா லங்கள் கற்சிலை போல
வாழ்வதாய் எண்ணும் வாயுள பூச்சிகள்!
நன்றி மறந்து நண்பரைக் கொன்று
பன்றிகள் போலப் பசியையே கருதி
ஊரை யடித்து உலையிலே போட்டு
லஞ்சம் வாங்கி லட்சம் குவித்து
ஈனா இருமல் இருதய நோய்கள்
கோழை இரத்தக் கொதிப்பு சர்க்கரை
நோயெனப் பலவாய் நொந்து விழுந்து
பாவி என்றொரு பட்டமும் பெற்று
ஆவி பிரிந்து ஆண்டவ னிடத்துப்
போவா நன்றிப் புகழுடை மனிதர்
எத்தனை பேரோ எவர்தான் அவரோ
கண்ணா உனைநான் கனிவுடன் கேட்பேன்
எண்ணும் செல்வம் எவைஇலை யேனும்
நல்லவன் அன்பன் நன்றி மிகுந்தவன்
என்னும் பெயரே எனக்கருள் வாய் நீ
சாவின் முன்னம் உனைச் சந்திக்க முடிந்தால்
இவையே கேட்பேன் இன்னருள் புரிக!

# டென்ஷனே இல்லாமல் புதிய நாளை வரவேற்க...

வாழ்க்கை வாழ்வதற்கே!

காலையில் விழித்தெழும்போது, இன் றைய தினம் செய்ய வேண்டிய வேலைகள் என்னென்ன என்று சிந் தித்துக் கொண்டே எழுந்தால், 'டென்ஷன்' தானாகவே தொற்றிக் கொள்ளும் இதைத் தவிர்க்க...



முதல் நாள் இரவே அடுத்த நாள் செய்ய வேண் டிய வே வேலைகள், தொடர்பு கொள்ள வேண்டிய நபர்கள், வாங்க வேண் டிய பொருட்கள் என முக்கியமான வேலை களை ஒரு பேப்பரில் எழுதி விட்டு நிம்மதியாக படுத்துத் தூங்க வேண்டும்.

அடுத்த நாள் எழும்போது, இதைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் இனிமையான சங்கீதம் கேட்க வேண்டும். பல் துலக்குவது, பால்/காபி/டீ குடிப்பது, காலைக் கடன்களை முடிப்பது உட்பட முதல் அரை மணி நேர வேலைகளை செய்து முடித்த பின், முதல் நாள் இரவு எழு திய பட்டியலைப் பார்த்துக் கொண்டால் எந் தெந்த வேலை களை முதலில் செய்வது என்ற தெளிவு பிறக் கும்.

சுறுசுறுப்பாய் வேலைகளைச் செய்யத் தொடங் கலாம். இது அடிப்படை. இது தவிர தினமும் உங்கள் மனதை "ரிலாக்ஸ்" செய்து கொள்ள சில யோசனை கள்...

➢ இனிமையான சங்கீதம் கேட்க அடிப் படைத் தேவையாக அமைவது, குறைந்த பட்சம் ஒரு கருவி. அது கசட், பிளேயராகவோ, எம்.பி. 3யாகவோ, கம்ப்யூட்டராகவோ இருக்கலாம். இனிமையான சங்கீதத்தை இதமாகக் கேட்கும் வகையில் அறைகளில் ஸ்பீக்கர் வசதி செய்து கொண்டால் மிக நல்லது.

நீங்கள் பயன்படுத்தும் அந்தக் கருவி எந்தப் பிரச்சினையும் இல்லாமல் சரியாக இயங்குகிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். சரியாக இயங்கவில்லை என்றால், அதைச் சரி செய்வதில் எவ்வித தாமதமும் இருக்கக் கூடாது.

➢ செடி வளர்க்கலாம். தினமும் ஒரே ஒரு பூவாவது தரக் கூடிய வகையில், பூச்செடி வளர்க்கலாம். எந்தச் செடியையும் அதன் அருகில் அமர்ந்து பேசி கொஞ்சி, தண்ணீர் விட்டு வளர்த்தால், நீங்கள் எதிர்பார்ப்பது போலவே பூக்களைக் கொடுக்கும்.

அவற்றுக்கும் மனது உண்டு என்பதை மறந்து விடாதீர்கள். நாமே வளர்த்து, ஒரே ஒரு பூ பூத்தால் கூட, அதில் கிடைக்கும் மன நிறைவு, நமக்கு நிம்மதியைக் கொடுக்கும்.

➢ கவிதை எழுதப் பிடிக்குமா? அடி மன தில் தோன்றும் எண்ணங்களை வெளிப்படுத் தும் கவிதையாக அது அமைய வேண்டும். கவிதை எழுதப் பழகினால் மன வளம் பெரு கும்.

எழுத்து வளம் பெருகும். உங்களிடம் உள்ள வலிமையான கருத்துக்கள், பலவீன மான கருத்துக்கள் என்னென்ன என்பதைப் பாகுபடுத்திப் பிரித்துப் பார்க்கும் அறிவு வளரும்.

➢ பாட்டு பாடலாம், ஓவியம் வரையலாம், துணி தைக்கலாம், நகைகள் செய்யலாம். இது போன்ற ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடும்போது உங்களிடையே உள்ள கலைத் தன்மை வெளிப்படும். இதுவே உங் களின் தனித் தன்மையை நிலை நாட்டும்.

➢ ஒரு வேலை செய்து கொண்டிருக்கும் போது தேவையற்ற விடயங்களை மனதில் அசை போட வேண்டாம். உங்களுக்கு சம் பந்தம் இல்லாத விடயங்களில் நாட்டம் செலுத் தும் போது வேலையில் கவனம் குறையும்.


அதுவே உங்களுக்கு ஆபத்தாய் அமைந்து விடும். முழுமையான பணி செய்த திருப்தி ஏற்படாது.

மன நிம்மதி கெடும். மேலே சொல் லப்பட்டுள்ள விடயங்கள் அனைத்தையும் பின்பற்றுவது மிகவும் கடினம் தான். வாழ்க் கையில் சந்தோஷமும் நிலைப்பதில்லை. துன்பங்களும் நிலைப்பதில்லை.

இன்றைய தினத்தில் உள்ள கடமைக ளையும், பணிகளையும் சீராகச் செய்யும் போது கிடைக்கும் நிம்மதியுடன், திருப்தியாக வாழப் பழகிக் கொள்ளுங்கள். வாழ்க்கை வாழ்வதற்கே!

# சுகாதாரம், மருத்துவம், உளவியல் பிரச்சினைகளால் துன்பங்களை எதிர்கொண்டுள்ள முகாம் மக்கள்

வடக்கில் ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் பெய்த கடும் மழை தணிந்துள்ளபோதும் மழை வெள்ளம் வற்றுவதற்கு அதிக நாட்கள் பிடித்தது. கடும் மழையாலும் வெள்ளத்தாலும் வவுனியா முகாம்களிலுள்ள சுமார் 3 லட்சம் மக்கள் சொல்லொணாத் துன்பத்தை எதிர்கொண்டனர்.



அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள பருவ மழை பெரும் பீதியை இடம்பெயர்ந்த மக்கள் மத்தியில் தோற்றுவிக்கவுள்ளது.

ஏற்கனவே பெய்த அடைமழையால் வவுனியா மெனிக்ஃபாம் முகாம்களில் உள்ள மக்கள் தங்கியிருக்க இடம், குடிநீர் மற்றும் சமைத்து உண்ணும் வசதிகள் இல்லாமல் பட்டினியிருக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டனர். மலசல கூடங்கள் நிரம்பி வழிந்து மோசமான நிலைமையை ஏற்படுத்தியதுடன் பயங்கரமான தொற்றுநோய்கள் பரவும் ஆபத்தையும் தோற்றுவித்திருந்தது.

இதனால், அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் உடனடியாக மலசலகூடங்களைத் திருத்தி அமைத்ததுடன், தற்காலிக மலசல கூடங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி எஸ். சாள்ஸ் தெரிவித்தார்.

### சுகாதார கல்விப்பணியகத்தின் செயற்றிட்டங்கள்

மழை காரணமாக தொற்றுநோய்கள் பரவக்கூடிய ஆபத்து இருப்பதாக சுகாதாரத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

முகாம்களின் ஏற்கனவே நெருககடி காரணமாக மோசமான நிலைமையால் தொற்றுநோய்கள் மற்றும் பல வியாதிகள் ஏற்படும் ஆபத்து தோன்றியுள்ளது.

இதனை தடுக்கும் நோக்குடன், அரசாங்க மருத்துவர்கள், மருத்துவ மாதுகள், தொண்டர்கள் இணைந்து விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முகாம்களில் சுகாதாரத்தைப் பேணும் பொருட்டும் தொற்றுநோய்கள் பரவாமல் இருப்பதற்கான அவசர நடவடிக்கைகளையும் சிகிச்சைகளையும் அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

வவுனியா மெனிக்ஃபாம் நலன்புரி நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள சுகாதார நிலைமைகளை மற்றும் சிறுவர்களின் உளரீதியான பாதிப்புக்கள் பற்றி நேரடியாகப் பார்வையிட்ட சுகாதாரப் பணியகத்தின் டாக்டர்.எஸ்.நஜிமுடீன், அங்குள்ள நிலைமைகளை விடிவை நோக்கி வாசகர்களுக்காக எம்முடன் பகிர்ந்துகொண்டார்.

இடம்பெயர்ந்தோர் பற்றிய விசேட திட்டத்திற்காக தான் அங்கு சென்றிருந்ததாகக் கூறிய அவர், அங்குள்ள ஐந்து கிராமங்களுக்குச் சென்று சுகாதார நிலைமை குறித்து ஆராய்ந்ததாகச் சொன்னார்.

"நெருக்கடியினாலும் மழை வெள்ளத்திற்குப் பின்னரும் அங்கு தொற்றுநோய்கள் ஒரு பிரச்சினையாக இருக்கின்றது. இருமலுடன் சேர்ந்த காய்ச்சல் பரவலாகப் பலருக்கும் ஏற்படடிருக்கிறது.

50 நோயாளிகளுக்கு நான் அங்கு நின்றபோது சிகிச்சையளித்தேன்" என்று கூறிய அவர், 90 சதவீதமானவர்கள் இவ்வாறான காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருந்ததாகச் சொன்னார்.

வயிற்றுப்போக்கு, செங்கண்மாரி, டைபாய்ட் எனப்படுகின்ற நெருப்புக் காய்ச்சல், மலேரியா தொற்றுக்கள், சின்னமுத்து, அம்மை போன்ற நோய்கள் இங்கு தீவிரமாகப் பரவி வருகின்றன. சிறுவர்கள் ஐந்து ஆறு நாட்களுக்கு நீடிக்கும் காய்ச்சலினால் பாதிக்கப்படுகின்றனர். நீரினாலும் உணவினாலும் தொற்றக்கூடிய நோய்கள் இவர்களுக்குப் பாரிய பிரச்சினையாக இருக்கிறது.

"போதியளவிற்கு நீர் இல்லை. இதனால் அவர்கள் சுத்தமாகக் கை, கால்களைக் கழுவ முடியாது. சுகாதாரமாக மலசலகூடங்களைப் பாவிக்க முடியாது. உணவைத் துப்பரவாகப் பேணமுடியாது.

இந்தத் தொற்று நோய்கள் இன்னும் இருந்துகொண்டிருப்பதற்கு இதுதான் முக்கிய காரணம்" என கிறார் டாக்டர் நஜுமுடீன்.


இதேவேளை, யுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட இழப்புகளினால் இங்குள்ள அனைவரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருக்கின்றார் கள். பல குடும்பங்கள் ஒரே கொட்டி லில் தங்கவேண்டிய கட் டாயம் இருக்கினறது.

இந்த இட நெருக்கடியும் கூட தொற்று நோய்களைப் பரப்புவதற்கான முக்கிய காரணியாக இருந்துகொண்டிருக்கின்றது.

"மிகக் கடுமையான பிரச்சினையாக இருப்பது செங்கண்மாரி நோய் எனப்படுகின்ற இருள் ஒவ்வாமை நோய். இந்நோய் தொற்றுக்குட்பட்ட ஒருவரின் மலத்தின் மூலமாகப் பரவுகின்றது.

ஈக்கள் அங்கு அதிகமாகக் காணப்படுகினறது. போதியளவு மலசல கூடங்கள் இல்லை, மலசல கூடங்களுக்குப் பாவிப்பதற்கு போதிய நீர் இல்லை.

இதனால் ஈக்கள் நோயினைப் பரப்புகின்றது" என்று கூறிய அவர், கர்ப்பிணித் தாய்மாருக்கு இந்நோய் ஏற்படுமிடத்து அதிகமாக மரணத்தை ஏற்படுத்தக்கூடியது என்று தெரிவித்தார்.



ஒரு ஐம்பது பேரைப் பார்வையிட்டதில் கிட்டத்தட்ட 7-8 பேர்வரை இந்நோயால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் அவர் கூறினார்.

"நாங்கள் கடமையாற்றிக் கொண்டிருக்கின்ற சுகாதாரக் கல்விப் பணியகத்திலிருந்து ஒவ்வொரு வார மும் டாக்டர்கள் சென்று முகாம்களில தங்கியிருந்து சுகாதார கல்வி நடவடிககைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கினறோம். முக்கியமாக அங்குள்ள ஒவ்வொரு வலையத்திற்கும் கல்விப் பணியகத்தில் இருந்தும் 250ற்கும் மேற்பட்ட தொண்டர்களையும் பணியாளர்களையும் நியமித் திருக்கின்றோம். அவர்கள் ஒவ்வொரு கொட்டிலகளாக விஜயம் செய்து அங்குள்ளவர்களுடைய சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான சகல தகவல்களையும் அன்றன்றைக்கே எங்களுடைய திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்" என்று முகாம்களில் மேற்கொள்ப்பட்டுவரும் சுகாதார நடவடிக்கைகளை விளக்கினார் டாக்டர் நஜுமுடீன்.

### சிறுவர் நலன்

சிறுவர்களுக்கென தற்போது சிறுவர் பூங்காக்களை அமைத்து அவர்களை விளையாட்டில் ஈடுபடுத்தி வருவதாகக் கூறிய டாக்டர், உளவியல் ரீதியான தாக்கங்களிலிருந்து அவர்களை விடுவிப்பது தொடர்பிலும் பணியாற்றிவருவதாகக் கூறினார்.

"முகாம்களுக்கு மேலாக விமானம் பறந்து செல்கின்றபொழுது சிறுவர்கள் உடனடியாக நிலத்தில் விழுந்து படுப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. யுத்தகாலத்தில் ஏற்பட்ட பயம் இன்னும் அவர்கள் மத்தியில் இருக்கிறது. இதேவேளை உறவினர்களை இழந்து கவனிப் பாரன்றி இருக்கின்ற சிறுவர்கள், சிறு மிகள், இளம் பெண்கள் ஆகியோர் துஸ்பிரயோகத்திற்கு உட்படக்கூடிய சாத்தியக் கூறுகள் மிக அதிகம் என்றே கூற வேண்டும்" என்றார் அவர்.

இந்த நிலைமைகளை மாற்றவும் உடனடியாக நடவடிக்கைகள் எடுககப்படவேண்டும் என்று சுகாதாரப் பணியகத்தைச் சேர்ந்த டாக்டர் நஜுமுடீன் தெரிவித்தார்.

கிருஷ்ணி இஃபாம். கந்தசாமி

# போரின் இறுதி ஐந்து நாட்களில் 20 ஆயிரம் தமிழர்கள் பலியாகினர்

## த கார்டியனுக்கு தமிழ்வாணி ஞானகுமார் செவ்வி

(நேற்றைய தொடர்ச்சி)

தனது குழந்தையை அவர் மடியில் வைத்திருந்தார். அந்தக் குழந்தை இறந்திருந்திருந்தது. ஆனால் அந்தத் தாய்க்கு அது தெரியாது. குழந்தை இறந்தது பற்றி இப்போது அவரிடம் சொல்ல வேண்டாம், ஏனினல் விடயம் தெரிந்தால் தாய் அழுது, கூப்பாடு போடுவார் அத்துடன்.... நாங்கள்



அந்தத் தாயை முதலில் காப்பாற்ற வேண்டும் என்று மருத்துவர்கள் சொன்னார்கள்.

அதனால் நாங்கள் அந்தத் தாயிடம் கூறினோம். சரி நீங்கள் உங்கள் குழந்தையை எங்களிடம் தாருங்கள் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். நீங்கள் சென்று மருத்துவரிடம் சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள் என்று. சிகிச்சை முடிந்த பின்னரே அவரிடம் நாங்கள் குழந்தை இறந்து போய் விட்டது என்ற உண்மையைச் சொன்னோம். என்னால் இப்போது இலகுவாகச் சொல்லிவிட முடிகின்றது.

ஆனால் அந்தத் தருணத்தில் நான் பெரும் வேதனையை அனுபவித்தேன். அது ஒரு அப்பாவிக் குழந்தை. அது இறந்தது கூடத் தெரியாத தாய். குழந்தை தூங்கிக் கொண்டிருக்கிறது என நினைத்துக் கொண்டிருந்தாள்.

இது போன்ற பல சம்பவங்கள் நடந்திருக்கின்றன. ஒரு சமயம் தாய் இறந்து போயிருந்தார். அது தெரியாமலேயே அவரது குழந்தை அவர் மார்பில் பால் குடித்துக் கொண்டிருந்தது.

சண்டை இன்னும் இன்னும் நெருக்கமாக வந்தபோது கைகளில் என்ன கிடைத்ததோ அவற்றையே அவர்கள் உண்டார்கள். தூங்க



முடிந்தவர்கள் கிடைத்த இடங்களில் தூங்கினார்கள்.

எப்போதும் ஓடுவதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும். நீங்கள் ஓய்வாக இருந்து தூங்குவதற்குச் செல்ல முடியாது. எந்த நிமிடத்திலும் அந்த இடத்தைவிட்டு அகல்வதற்கு நீங்கள் தயாராக இருக்க வேண்டும்.

மே மாதம் 13 ஆம் நாள் மருத்துமனை குண்டுத் தாக்குதல்களுக்கு உள்ளானபோது அங்கிருந்த 50 பேர் கொல்லப்பட்டனர். அதன் பின்னர் தமிழ்வாணிக்கு அங்கு வேலை இருக்கவில்லை.

எங்களுடைய பதுங்குகுழிக்கு அடுத்ததாக இருந்த குழியின் மீது குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. அதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேர் உயிரிழந்தனர். மூன்று பேர் காயமடைந்தனர்.

“நான் அவர்களைப் பார்த்தேன்... திடீரென மக்கள் கதறி அழும் சத்தம் கேட்டது. நான் நினைத்தேன் இது எங்கோ எமக்கு மிக அருகில் என்று. ஆனால் நான் அந்த இடத்தை கற்பனை பண்ணிக் கூடப் பார்க்கவில்லை. அந்த இடம் முழுவதும் இரத்தக் கறையாகக் கிடந்தது. உடலங்கள் எல்லா இடங்களிலும் துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்தன. என்னுடைய சகோதரன் சொன்னான். எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு இந்த இடத்தை விட்டு நாங்கள் உடனடியாக விலகிச் செல்ல வேண்டும் என்று”

கடைசி ஐந்து நாட்களில் மட்டும் சுமார் 20 ஆயிரம் பேர் இறந்திருக்கலாம் என தமிழ்வாணி கூறுகின்றார். ஆனால் உயிரிழந்தவர்களின் உண்மையான சரியான எண்ணிக்கையைக் கணக்கிட முடியாது என ஐக்கிய நாடுகள் சபை கூறுகின்றது.

எனினும் சாட்சிகளிடம் இருந்து தாம் பெற்றுக்கொண்ட கணக்குகளின் படி தமிழ்வாணி கூறுவது சரியானது தான் எனத் தெரிவிக்கிறது உலகத் தமிழ் பேரவை.

கடைசி குண்டுத் தாக்குதல்களின் பின்னர் படையினர் கட்டுப்பாட்டுப் பகுதிக்க வந்த இலட்சக்கணக்கான மக்களுடன் சேர்ந்து தமிழ்வாணியும் வந்திருந்தார். அவர் அகதிகள் முகாமில் அடைக்கப்பட்டார்.

நாங்கள் நகர்வதற்கு தொடங்கினோம். சுமார் ஒரு மணிநேரம் அல்லது அதற்கு மேல் நடந்ததன் பின்னர் படையினரை நாங்கள் கண்டோம். வாருங்கள், நீங்கள் இப்போது பாதுகாப்பாக இருக்கிறீர்கள். உங்களுக்கு உணவும் தண்ணீரும் தரப்படும் என்று அவர்கள் சொன்னார்கள். எங்கும் உடலங்கள் சிதறிக் கிடந்தன. துண்டு துண்டுகளாகவும் சிதறிக் கிடந்தன. அவற்றுக்கு நடுவே நாங்கள் நடந்து வந்தோம். அங்கே தான் தனது இறந்துபோன குழந்தையை என்ன செய்வது என்று தெரியாமல் தவித்து நின்ற தாயை தமிழ்வாணி கண்டார்.

உடலங்களை அடக்கம் செய்வதற்கு எவருக்கும் நேரம் இருக்கவில்லை. சிலர் அவற்றை பதுங்கு குழிகளுக்குள் தள்ளிவிட்டு அதன் மேல் கொஞ்சம் மண்ணை அள்ளிப் போட்டு மறைத்தார்கள். அதுதான் அவர்களால் செய்ய முடிந்த மிகச் சிறந்த விடயமாக அப்போது அது இருந்தது.

அந்த இரவு அவர்கள் அனைவரும் பாடசாலை ஒன்றில் தூங்கினார்கள். அதன் பின்னர் பேரூந்துகளில் வவுனியா நகரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். அங்கிருந்து அவரது தாயாருடன் பேசினார். என்னை இங்கிருந்து வெளியே எடுங்கள் அம்மா என்று நான் சொன்னேன். அந்த இடத்தை விட்டு வெளியேறிவிட வேண்டும் என்றிருந்தது எனக்கு. அத்துடன் என் தொலைபேசி தொடர்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தமிழ்வாணி வந்த முதல் நாளில் எந்த உணவும் அவர்களுக்குக் கிடையாது. அத்துடன் அவருடன் இருந்தவர்களின் தொடர்புகளையும் அவர் இழந்துவிட்டிருந்தார். மேலும் பலருடன் சேர்ந்து ஒரு கூடாரத்திற்குள் அவர் உறங்கினார்.

போர்ப் பகுதிகளை விட்டு பிரிந்து முகாம்களுக்கு வந்தால் அதன் நிலைமை அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது.

“நீங்கள் எங்கே போனாலும் அங்கு பெரியதொரு வரிசை நின்று கொண்டிருக்கும். உங்களுக்கு என்ன வேண்டும் என்றாலும் வரிசையில் நின்றாக வேண்டும்.

அது எவ்வளவு அருவருப்பாக இருந்தது

### வன்னி யுத்தத்தின் நேரடி அனுபவங்கள்

என்பதை என்னால் விளக்க முடியவில்லை. எங்கு பார்த்தாலும் நுளம்பும் சுகாதாரமற்ற நிலையும்... மக்களுக்கு எல்லா வகையான வருத்தங்களும் வந்தன.

மக்கள் தமது சொந்தங்களை இழந்தனர்... அத் சோர்வடைந்தார்கள். மக்கள் காணாமல் போனார்கள். சிலர் தற்கொலை செய்து கொண்டார்கள். ஒரு ஆசிரியை மரத்தில் தூக்குப் போட்டுத் தொங்கிக் கொண்டிருந்தபடி கண்டு பிடிக்கப்பட்டார்.



படைத்துறை புலனாய்வாளர்கள் முகாம்களைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். முன்னாள் போராளிகளைக் கண்டறிவதற்காக.

அது ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலை. நீங்கள் சுதந்திரமாக நடக்கலாம். ஆனால் சிறைகளுக்கு உள்ளேயே நீங்கள் இருக்கிறீர்கள். அதை விட்டு வெளியே செல்ல நீங்கள் அனுமதிக்கப்பட மாட்டீர்கள். உங்களால் முடியாது. காவலர்கள் எல்லா இடங்களிலும் நின்றிருப்பார்கள். அத்துடன் சோதனை நிலையங்களும் இருக்கும்.

தமிழ்வாணி முகாமுக்கு வந்து சில நாட்கள் கழித்து அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபைக்கான தூதரகம் ஊடாக பிரித்தானிய தூதரகம் அவரைத் தொடர்பு கொண்டது. அவரது பெற்றோரும் ‘த கார்டியன்’ நாளேடும் மேற்கொண்ட நடவடிக்கைகளை அடுத்து இது நிகழ்ந்தது.

அதன் பின்னர் அவர் சன நெரிசலால் தவித்த, மெனிக் முகாமின் இரண்டாம் வட்டாரத்தில் இருந்து முதலாம் வட்டாரத்திற்கு மாற்றப்பட்டார். இந்தப் பகுதியே வெளியிருந்து வருகை தருபவர்களுக்கு அரசால் காணப்பிக்கப்படும் பகுதி.

ஐக்கிய நாடுகள் சபைக்கான பொதுச் செயலாளர் பான் கீ மூன் அங்கு வரும்போது நான் அங்கே இருந்தேன். அவர் அங்கே ஒரு 10 நிமிடங்கள் தான் இருந்திருப்பார். உடனடியாகவே திரும்பிச் சென்றுவிட்டார். முகாமுக்குள் அவர் ஏன் செல்லவில்லை? ஏன் மக்களைச் சந்தித்து கொஞ்ச நேரத்தைச் செலவிட்டு அவர்களின் பிரச்சினைகளைக் கேட்கவில்லை? நான் நினைக்கிறேன் அவருக்கு அந்தப் பொறுப்பு இருந்தது என்று.

அத்துடன் மக்களும் அவரிடம் இருந்து நிறையவே எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர் 10 நிமிடங்கள் மட்டுமே அங்கு இருந்தார் அவ்வளவுதான்.

தமிழ்வாணி சில நாட்கள் முகாமில் தங்கி இருக்க வேண்டும் என்றும் அதன் பின்னர் அவர் விடுவிக்கப்படுவார் என்றும் அதிகாரிகள் தெரிவித்திருந்தனர். அதன்பின்னர் 48 மணிநேரம் மூன்று நாட்களாக மாறியது. பின்னர் வாரங்களாக மாதங்களாக அது மாறியது.

அப்போது நான் நினைத்தேன். சரி இனி இது நடக்கப் போவதில்லை என்று. அவர் அங்கு என்ன செய்து கொண்டிருந்தார் என்பது பற்றியும் மருத்துவமனையில் என்ன செய்துகொண்டிருந்தார் என்பது பற்றியும் ஐந்து தடவைகள் அதிகாரிகளால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்.

கடந்த வாரத்தில் அவரை அழைத்த அதிகாரிகள் அவர் வீட்டிற்குச் செல்லலாம் எனத் தெரிவித்திருந்தனர். அரச தலைவரின் சகோதரர் பசில் ராஜபக்ஷவைச் சந்திப்பதற்காக அவர் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சரி இந்த நாட்டில் பல்வேறு விடயங்களுக்கு மத்தியில் நீர் பயணித்து வந்திருக்கிறீர். இப்போது நீர் விடுதலை செய்யப்படுகிறீர். நீ சென்று உம்முடைய குடும்பத்துடன் இணைந்து கொள்ளலாம். மகிழ்ச்சியாக இருக்கலாம். அதற்காக அவர் மன்னிப்பு எதுவும் கேட்கவில்லை. அதன் பின்னர் அவர் பிரித்தானிய தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டார்.

நடந்த விபரங்கள் பற்றி அவர் பேசும் விதம் சில சமயங்களில் அவரது உணர்வுகளைக் காட்டிக் கொடுக்கிறது. அவரது முடி பின்புறமாக இறுக்கக் கட்டப்பட்டுள்ளது. பிரித்தானியாவை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் மிக அழகான முடியை அவர் கொண்டிருந்தார்.

ஆனால் அவையெல்லாம் முகாம் வாழ்க்கையில் இழக்கப்பட்டு விட்டதாக அவர் கூறுகின்றார். இப்போது என்ன செய்வது என்பது தொடர்பில் நிச்சயமில்லாத நிலையில் அவர் இருக்கிறார். அனேகமாக மருத்துவத் துறையில் ஏதாவது செய்யக்கூடும்.

மக்களுக்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்ய முடிந்தது குறித்து நான் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றேன். நான் பிரித்தானியாவில் இருக்கின்றேன் என்பது உண்மையல்ல என்று இப்போதும் எண்ணிக்கொண்டிருக்கிறேன்... நான் உயிருடன் இருப்பேன் என்றோ பிரித்தானியாவுக்குத் திரும்பி வருவேன் என்றோ நான் எண்ணி இருக்கவே இல்லை. முகாமில் இருக்கும்போது கூட அப்படி எண்ணவில்லை. (முற்றும்)

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்.

-சம்பந்தர்

வலம்புரி

## திருநெல்வேலி பால்சாலையின் மந்தமான போக்கை நீக்க வேண்டும்

யாழ். குடாநாட்டின் உற்பத்தித்துறை எத்துணை பின்தங்கியுள்ளது என்பதற்கு பல உதாரணங்களைச் சுட்டிக்காட்ட முடியும்.

சரஸ்வதி பூசை ஆரம்பித்ததனால் ஒரு கிலோ கதலி வாழைப்பழம் எழுபத்தைந்து ரூபாயைத் தாண்டிவிட்டது.

விஜயதசமிக்கு நூறு ரூபாயைத் தாண்டும் என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல.

இது போன்று தேங்காயின் விலையும் ஐம்பது ரூபாயை எட்டிப்பிடிப்பதற்கு இன்னமும் ஐந்து ரூபாயே மீதமாயுள்ளது.

யாழ். குடாநாட்டில் தென்னை உற்பத்திக்கான ஊக்குவிப்பு முயற்சிகள் விவசாய கண்காட்சியின் போது மேற்கொள்ளப்பட்டதாயினும் பல இடங்கள் வானம் பார்த்த பூமியாகக் காட்சிதருவது வேதனைக்குரியதே.

நிலவளத்தைத் தகுந்த முறையில் பயன்படுத்தி எங்கள் வாழ்வியல் தேவைகளை நிறைவு செய்யும் வாய்ப்பு நிறையவே இருந்தும், அவை நடைபெறாத விடயமாகிப் போய்விட்டன.

இவை தவிர ஆடை உற்பத்தி, தையல் நிலையங்கள், கண்ணாடித் தொழிற்சாலைகள், குளிபான உற்பத்திகள் என எதுவுமே இல்லாத நிலையில், யாழ்ப்பாணத்தில் இயங்கக் கூடிய ஒரு சில அமைப்புகளும் ஏனோதானோ என்ற கோணல் போக்கில் இயங்குவதைக் காணமுடிகின்றது.

இதில் திருநெல்வேலியில் இயங்கும் பால்சாலையும் ஒன்றெனலாம்.

2009ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை சமர்பித்த இந்த நாட்டின் ஜனாதி பதியும் நிதி அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷ அவர்கள் பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டங்களை முன்வைத்தார்.

இதற்காக பால் மாடுகளை இறைச்சிக்காக வெட்டுவது தண்டனைக்குரிய குற்றமாகவும் ஒரு லீற்றர் பாலின் ஆகக்குறைந்த விலையையும் நிர்ணயம் செய்திருந்தார்.

இதன் நோக்கம் பால் உற்பத்தியை அதிகரிப்பதாகும். ஆனால் யாழ்ப்பாணத்தில் இந்த திட்டம் பூச்சிய நிலையிலேயே உள்ளது.

திருநெல்வேலி பால்சாலை பல கிளைகளை அமைத்துள்ளது. இருந்தும் காலை 8 மணிக்கே பால் முடிந்து விடுகிறது.

அவ்வாறாயின் பால்சாலை என விளம்பரப் பலகை, அதற்கொரு கட்டிடம், வாடகை, பணியாளர், இவையெல்லாம் எதற்கு?

துவிச்சக்கர வண்டியில் வைத்து காலை 7 மணிக்கு முன்னதாகப் பாலை விற்றுவிட்டு போகலாமே.

முக்கிய இடங்களில் பால்சாலைகளை அமைத்துவிட்டு பால்விற்பனை இல்லையென்று கூறுவதானது அந்த அமைப்பில் இருக்கக்கூடிய திட்டமிடலின் குறைபாட்டைக் காட்டுகிறது.

எனவே திருநெல்வேலி பால்சாலை எவ்வளவு விரைவாக அலுவலகத்தைப் பூட்டி விட்டு போகலாம் என்பதை விடுத்து, பால்சாலைகள் உற்சாகமான விற்பனையில் ஈடுபட வழி செய்ய வேண்டும்.

இல்லையேல் அதனை தனியார் பொறுப்பேற்க விட்டுக்கொடுப்பது யாழ்ப்பாணத்தில் பால் உற்பத்தி அதிகரிக்க உதவுவதாக இருக்கும்.

# இலங்கை விவகாரம் குறித்து பான் கீ மூன் பேசுகையில் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு தடை

## இன்னர் சிற்றி பிறஸ் விசனம்

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தை உரிய முறையில் கையாளாமை குறித்து விமர்சனத்திற்குள்ளான ஐ.நா. சபை பொதுச் செயலாளர் பான் கீ மூன் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் பொதுச் சபைக் கூட்டத்திற்கு முன் எழக்கூடிய விமர்சனங் களைத் தவிர்ப்பதற்கான செய்தியாளர்களின் கேள்விக்கு தடை விதித்துள்ளார் என்று இன்னர் சிற்றி பிறஸ் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து இன்னர்சிற்றிப்பிறஸ் தெரிவித்துள்ளதாவது ,

இலங்கையில் இடம்பெற்ற பொதுமக்களின் மரணங்களையும் தடுப்புக்காவல் சம்வங்களையும் உரிய முறையில் கையாளாமை குறித்து பரவளான விமர்சனத்திற்குள்ளான செயலாளர் நாயகம் பான்கீமூனின் ஐக்கிய நாடுகள் நிர்வாகம் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் பொதுச் சபைக்கூட்டத்திற்கு முன்னதாக எழக்கூடிய விமர்சனங்களை தவிர்க்கும் முயற்சியில் தகவல்கள் வெளியிடுவதை கட்டுப்படுத்துவதுடன் கேள்விகள் கேட்கப்படுவதையும் மட்டுப்படுத்த ஆரம்பித்துள் ளது.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபன ஊடகங்களுடன் பான்கீமூன் வியாழக்கிழமை கேள்வி பதில் எதுவும் இன்றி நடத்திய மாநாட்டில் இலங்கை விவகாரங்கள் உட்பட பல விடயங்கள் உட்பட அறிக்கை ஒன்றை வாசிக்க ஆரம்பித்தார்.

இதனையடுத்து பானின் பேச்சாளர் மிசேல் மொன்ராஸ் இலங்கை பற்றிய கேள்விகளை ஏற்றுக்கொள்ளாததுடன் ஊடகவியலாளர்கள் அத்தகைய கேள்விகளை கேட்கவும் அனுமதிக்கவில்லை. ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தினால் முக்கியமானதொரு செயலாளர் நாயகத்தின் ஆரம்ப அறிக்கையில் கருதப்படும் ஒரு விடயம் அது இலங்கை சம்பந்தப்பட்டதாயினும் அது பற்றிய கேள்விகள் அனுமதிக்கப்பட வேண்டும். இலங்கை இராணுவம் நீதி விசாரணையின்றி புரிந்த படுகொலைகள்ள சித்தரிப்பதாகக் கூறி சில வாரங்களுக்கு முன் ஒளி பரப்பப்பட்ட வீடியோ காட்சிகள் பற்றி செயலாளர் நாயகத்தின் ஆரம்ப உரையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. இது பற்றி இன்னர் சிற்றிப்பிறஸ் அவரது பேச்சாளரிடம் கேட்ட போது நேரடியாக அன்றி சுற்றி வளைக்கப்பட்டபதிலே கிடைத் தது.

வியாழக்கிழமை வெளியிடப்பட்ட அடக்கமான ஆரம்ப அறிக்கைக்கு நீண்ட நாட்களுக்கு முன் இடம்பெற்ற சம்பவம் பற்றி அதாவது வவுனியாவில் உள்ள கட்டாய தடுப்புக் காவல் முகாமில் இருந்து 10ஆயிரம் பேர் அகற்றப்பட்டமை பற்றியோ அவர்களில் ஏறத்தாழ அரைவாசிப் பேர் தூர உள்ள வேறு முகாம் களுக்கு நகர்த்திச் செல்லப்பட்டமை பற்றியோ எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும் இன்னர்சிற்றிப்பிறஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

முகாம்கள் குறித்து செயலாளர் நாயகத்தின் அறிக்கை வெளி வர முதல் நாள் பிரித்தானிய கார்டியன் பத்திரிகை வெளியிடப்பட்ட ஒரு செய்தியில் ஒருவர் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அங்கு வந்த போது நான் அங்கு நின்றிருந்தேன். 10 நிமிடங்கள் மட்டும் அவர் அங்கிருந்து விட்டு திரும்பி விட்டார். அவர் முகாமுக்குச் சென்று சிறிது நேரம் அங்கிருந்து மக்களுடன் பேசி அவர்களுக்குள்ள பிரச்சினை என்னவென்று ஏன் அவர்களிடம் கேட்கவில்லை? அவருக்கு சில பொறுப்புக்கள் உண்டு. மக்கள் அவரிடம் இருந்து எதையாவது எதிர்பார்த்திருப்பார்கள். ஆனால் அவர் 10 நிமிடங்கள் மட்டுமே அங்கு தங்கியிருந்தார். இவ்வாறு பிரித்தானிய கார்டியன் பத்திரிகையில் தெரிவித்திருந்தார். (ஓ-6)

## ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள பிரதமர் அமெரிக்கா விஜயம்


(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் 64 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் நோக்கில் பிரதமர் ரட்ணசிறி விக்ரம நாயக்க அமெரிக்க விஜயம் செய்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விற்கு பதிலாக பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளார். அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள அமர்வுகளில் பிரதமர் பகிரங்க உரையாற்ற உள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

ஐக்கியநாடுகளின் 64 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க சிங்கள மொழியில் உரையாற்றுவார் என குறிப்பிடப்படுகிறது.

விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் சமாதானம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பிலேயே பிரதமர் இங்கு உரையாற்றுவார் எனத்தெரி விக்கப்படுகிறது. (ஓ-6)



இன்று வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப் பெருமாள் கொடியேற்றம்

## நினைத்ததை நிறைவேற்றும் வேங்கடவனே கொடியேற்று

பாண்டவர்க்கு தூதுசென்ற பாண்டுரங்கா கொடியேற்று
பாஞ்சாலி துயர் தீர்த்த பரந்தாமனே! கொடியேற்று
நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற நெடுமாலே கொடியேற்று!
நினைத்ததை நிறைவேற்றும் வேங்கடவனே கொடியேற்று
வேண்டிடும் உரிமை தந்திட கண்ணனே கொடியேற்று
விரும்பிடும் வெற்றியைச் சேர்த்திட அரங்கனே கொடியேற்று
ஆண்டிடு எம்மை நீ அரவணைத்து காத்திடு வண்ணையழகனே!
அன்பனே! அலைகடல் வாசனே! காத்தருள வேண்டுமையா!

மதுரகவி
காரை எம்.பி. அருளானந்தன்

# முதல்வன் -தொண்டன்

பெருமைப் பண்பாவது செருக்கு இல்லாமல் வாழ்தல். சிறுமையோ செருக்கு மிகுந்த அதன் எல்லையில் நின்றுவிடுவதாகும்.

ஆம், மனிதர்களில் இரண்டு பிரிவினர் உண்டு. உயர்ந்தவர், தாழ்ந்தவர், பெரியவர் சிறியவர் பொருட்களில்இரண்டு வகை உண்டு. உயர்ந்தது தாழ்ந்தது, இதில் மனிதர்களுக்கிடையேயான உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பிரிவு அவர்களுடைய பண்பின் அடிப்படையில் அமைவதாகும்.



ஆனால் உயருகின்ற வழிமுறையைத்தான் பலர் தவறாகப் புரிந்து கொள்கின்றனர். இன்றைய சமூகத்தில் ஒருவரை உயர்ந்த மனிதாராக அளக்கும் அளவுகோல் மூன்றாகும். பணம், பதவி, புகழ் இவை மூன்றும் தன்னிலே நல்லவைகள்தான். ஆனால்

## பரமபிதா காட்டிய பாதை

அவைகளைப் பயன்படுத்தும் முறையில் தான் ஒருவர் உயர்ந்தவராகவோ தாழ்ந்தவராகவோ மாறுகின்றார்.

ஆனால் ஒருவனை உண்மையிலே உயர்ந்தவனாக்கும் சிறந்தவழி எது என்றால், அது தொண்டன் வழி இன்றைய நற்செய்தியிலும் இயேசு இதைத்தான் கூறுகிறார். இந் நற்செய்தியின் முதல் பகுதியில் இயேசு தன் உள்ளத்து வேதனையோடு தன் பாடுகளைப் பற்றி தன் திருத்தூதர்க ளோடு பேசி வருவகின்றார். ஆனால், அவருடைய திருத் தூதர்களோ அவருடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளாதவர்களாக அவருடைய உணர்வுகளில் கலந்துகொள்வாதவர்களாக அவரின் வேதனை உணர்வுகளால் பாதிக்கப்படாதவர்களாக இருப்பதும் அதேவேளையில் தங்களுக்குள் யார் பெரியவன் என்ற விவாகத்தில் ஈடுபட்டு இருப்பதும் அவர்களின் முரண்பாடான குணத்தை வெளிப்படுத்துகின்றது.

இதுதான் இயேசுவுக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்திருக்கும் காரணம். தன்னுடைய வழித்தோன்றல்களே யாரைத் தன் இறையாட்சிப் பணிக்காக உருவாக்கிக் கொண்டிருந்தாரோ யார் தன் துன்பத்தில் தோள் கொடுப்பார் என்று எதிர்பார்த்திருந்தாரோ அவர்களே தன் துன்பத்தைப் பற்றிக்கடுகளவும் பாதிக்கப்படாமல் தங்களின் உயர்வைப் பற்றியே சண்டையிட்டு கொண்டிருப்பதை அறியும் போது வேறு என்ன நினைக்க முடியும்.

எனவே தான் இயேசு அவர்களுக்கு சாட்டையடி கொடுப்பதைப் போல சுளீரென்று ஒரு உண்மையைப் புரியவைக்கின்றார். முதல்வனாக இருக்க விரும்புகின்றவன் அனைவருக்கும் தொண்டனாக இருக்கவேண்டும் எனவே முதல்வன் தான் தொண்டன், தொண்டன் தான் முதல்வன் என் கூறுகிறார்.

ஜோன் றொபேர்ட்



# எந்தத் தேசியத்தின் பாதுகாப்பு ஆலோசகர்?

இந்திய நாட்டின் பாதுகாப்பு ஆலோசகரான எம்.கே.நாராயணன், சமீபத்தில் டில்லியில் நடந்த பொலிஸ் இயக்குநர்கள், தலைமை ஆய்வாளர்கள் மாநாட்டில் பேசிய பேச்சின் ஒரு பகுதி தமிழர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு நிதி உதவி செய்துவந்த புலம் பெயர் தமிழர்கள் உலகளாவிய அளவில் பரவியுள்ளதால், அந்த இயக்கம் மீண்டும் தலைத் தூக்கும் அச்சுறுத்தல் உள்ளது.

புலம் பெயர் தமிழர்களிடையே உள்ள அதிருப்தியுற்ற சக்திகள் ஒன்றிணைந்து அந்த பயங்கரவாத அமைப்பிற்கு ஆயுதம் வழங்கி மீண்டும் உயிரூட்டும் சாத்தியம் உள்ளது என்று எம்.கே. நாரயாணன் கூறியுள்ளார்.

அதுமட்டுமின்றி, அவர்களை உன்னிப்பாக கவனிக்க வேண்டும், அப்படி நிகழ்ந்தால் அதனை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராக இருந்துகொண்டு நாராயணனும் வெளியுறவுச் செயலராக இருந்த சிவ் சங்கர் மேனனும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சகோதரர்களான கோத்தபாய ராஜபக்ஷ, பசில் ராஜபக்ஷ ஆகியோருடன் இணைந்து ஒவ்வொரு நாளும் பேசி திட்டமிட்டு ஈழத் தமிழர்கள் அழிவு யுத்தத்தை கச்சிதமாக நிறைவேற்றியவர்கள் என்பதை தமிழ்நாட்டுத் தமிழர்களும், ஈழத் தமிழர்களும், புலம் பெயர்ந்த தமிழர்களும் நன்கு அறிந்துள்ளனர்.

தங்களை இன ரீதியாக ஒடுக்கும் சிங்கள பௌத்த இனவாத அரசிடமிருந்து விடுதலையைப் பெற ஈழத் தமிழர்கள் முன்னெடுத்த விடுதலைப் போராளிகளை - தமிழீழ விடுதலைப்புலிகளை -பயங்கரவாத இயக்கம் என்று முத்திரை குத்தி, அதனை ஒடுக்குவதாகக் கூறி, இந்திய மக்களையும், உலக நாடுகள் பலவற்றையும் ஏமாற்றி, இரண்டரை ஆண்டுகளில் ஒன்றரை இலட்சம் தமிழர்களை அழித்தொழித்த மாபெரும் யுத்தத்தின் காரணக் கர்த்தாக்களில் ஒருவரான எம்.கே. நாராயணன் இவ்வாறு பேசியிருப்பது தமிழ்நாட்டுத் தமிழர்கள் மட்டுமன்றி, உலகில் வாழும் எந்தத் தமிழருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்காது.

ஆனால், "அந்த இயக்கம் மீண்டும் தலையெடுத்துவிடக்கூடாது, உன்னிப்பாகக் கவனியுங்கள், எதையும் எதிர்கொள்ளத் தயாராகுங்கள் என்று அவர் கூறியிருப்பது, உலகத் தமிழர்கள் அனைவரையும் கோபங் கொள்ளச் செய்துள்ளது.


### தன்னை மறந்து ஒப்புக்கொண்ட உண்மை

நாராயணனின் பேச்சில் அவர் தன்னை அறியாமலேயே ஒரு உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார். "உலகெங்கிலும் வாழும் தமிழர்களை மிரட்டி நிதி சேர்த்தே விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வாங்கி வைத்துள்ளனர்" என்று கூறிவந்த இவர், இப்பொழுது அவர்களுக்கு முக்கிய நிதி ஆதாரமாக உள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் என்று கூறியுள்ளார்! இதன்மூலம் விடுதலைப் புலிகள் மிரட்டி பணம் பறித்து ஆயுதம் வாங்கு கிறார்கள் என்ற பொய்யுரைப்பை தனது வாயாலேயே உடைத்து உண்மையைக் கூறியுள்ளார்.

நாராயணனின் வர்த்தைகள் புதியதல்ல, இவை யாவும் வேறொரு நாளில் கோத்தபாய ராஜபக்ஷ பேசியதுதான்! விடுதலைப் புலிகளின் மூல பலம்.

அவர்கள் எந்த மக்களின் விடுதலைக்காக போராடுகிறார்களோ அவர்கள் தான் என்பதை முழுமையாக உணர்ந் துள்ள காரணத்தினால் தான், புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒற்றுமையை உடைக்க எல்லா விதமான பகீரத முயற்சியிலும் இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ ஈடுபட்டு வருகிறார்.

மலேசியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட விடுதலைப் புலிகளின் விவகாரங்களுக்கான பொறுப்பாளர் செல்வராசா பத்மநாதனை இன்றுவரை விசாரனை செய்து அவரிடம் இருந்து அவர்கள் பெறத் துடிக்கும் தகவல் புலம் பெயர்ந்த தமிழர்களின் நிதி மூலத்தை



கண்டறிவதுதான்.

ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க பெரும் பாடுபடும் இலங்கை அரசு மேற்கொண்டிருக்கும் அந்த முயற்சிக்கு நீங்களும் உதவுங்கள் என்று தான் டில்லியில் இருந்து நாராயணனும் பொலிஸ்துறை தலைவர்களுக்கு அறிவாலோசனை வழங்கியுள்ளார்.

### விடுதலையின் வேர் நீதியில் இல்லை!

ஓர் இனத்தின் நிதி மூலத்தை அழித்து விட்டால், அதன் விடுதலைப் போராட்டம் செத்துவிடும் என்று இந்த இனப்படுகொலை

# சீன ஊடுருவலிற்கு பதிலென்ன?

கர்த்தாக்கள் கணக்கு போடுகின்றனர்.

தங்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிக்கு சாத்வீக வழிகளில் நீதி பெற முடியாத நிலையிலேயே, அநீதிக்கு எதிரான நீதியான விடுதலை வேட்கை பிறக்கிறது. அந்த வேட்கையே விடுதலை உணர்வின் வேர். அது துளிர்விட்டு , கிளைவிட்டு தழைக்கும்போது போராட்ட வடிவத்தைப் பெறுகிறது. அதற்குப் பின்னர் தான் நிதி, சர்வதேச ஆதரவு என்பதெல்லாம்.

இது மக்களுக்காக வாழ்பவர் களுக்குப் புரியும்.நாட்டின் பாதுகாப்பை அந்நிய நாட்டிற்கு அடிமைப்படுத்துபவர்களுக்கு எப்படித் தெரியும்?

அதனால் தான் கோத்தபாயவிலிருந்து நாராயணன் வரை குழம்புகிறார்கள். வன்னியின் மீது இரத்தக் களரியை கட்டவிழ்த்து மக்களையும் அவர்களுக்காக நின்ற புலிகளையும் துடைத்தெறிந்த பின்னரும் விடுதலைச் சிறகுகள் விரிகிறேதே என்ற ஆச்சரியம் அவர்களுக்கு! முன்னெப்பொழுதையும் விட, தமிழீழத்தின் விடுதலைக்கான வேர் இப்போதுதான் வலிமையாக படர்கிறது.

இந்தியா, சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட தெற்காசிய இராணுவ வல்லமைகளின் பேராதரவோடுமே இரண்டாம் வாரம் வரை நடத்திய போரில் வன்னியில் போராட்டத்தை முடிவிற்குக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் உலக நாடுகளின் கண்களை அது திறந்துவிட்டது. இப்போது எல்லா நாடுகளும் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தை உணரத் தொடங்கிவிட்டன. அதுவே இவர்களை இப்படித் தறிகெட்டுப் பேசச் செய்கிறது.

இப் பேச்சுகளை தமிழினம் ஏற்கத் தேவையில்லை.

### சீன ஊடுருவலிற்கு பதிலென்ன?

இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பை உறுதி செய்ய கூட்டப்பட்ட பொலிஸ்துறை மாநாட்டில் இப்படி சம்பந்தம் இல்லாமல் பேசிய இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் நாராயணன், ஜம்மு -காஷ்மீர் மாநிலத்தின் லே பகுதியில் சீனப் படைகள் ஒன்றரை கிலோமீற்றர் தூரம் ஊடுருவி வந்தது மட்டுமின்றி,அது தங்களுக்குச் சொந்தமான பகுதி என்று சிகப்பில் குறியிட்டுவிட்டுச் சென்றது எப்படி? என்று இன்று அனைவரும் எழுப்பும் கேள்விக்கு பதில் கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

ஈழத்தமிழர்களை விடுதலைப் புலிகள் எனக் கூறி இந்தியாவின் அச்சுறுத்தலாகக் காட்டும் இந்தப் பாதுகாப்பு ஆலோசகருக்கு சீனா என்ன நட்பு நாடா? அப்படி ஒரு ஊடுருவலோ நடக்கவில்லை என்று இவர் கூறி அதனை வெளியுறவு அமைச்சகம் கூற, நாடே சிரித்தது.

எல்லையைக் காக்கும் இராணுவத்திற்கல்லவா தெரியும் எவ்வளவு தூரம் உள்ளே வந்த சீனன் கோடு போட்டு விட்டு போயுள்ளான் என்று இலங்கைப் பிரச்சினையில் அடுக்கடுக்காகப் பொய் கூறி, ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசையும், இந்திய மக்களையும் ஏமாற்றியது போல சீன ஊடுருவலையும் நடக்கவே இல்லை என்று கூறி பூசி மொழுகிப் பார்த்தார் நடக்கவில்லை.

எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வுகாண சீனாவுடன் 13 சுற்றுக்கள் பேச்சுவார்த்தை நடத்தி கண்ட பலன் இது. எல்லைப் பிரச்சினைக்குத் தீர்வு காண சீனா துணை அமைச்சர் தாய் பிங்குவாவுடன் இந்தியப் பிரதிநிதியாகப் பேச்சுவார்த்தை நடத்தியது இந்த நாராயணன் தான்.

13ஆவது சுற்றுப்பேச்சு சுமுகமாக நடந்து முடிந்துள்ளது. நாங்கள் பல வரைபடங்களை கையளித்துள்ளோம். அடுத்த கட்ட பேச்சுவார்த்தையில் அவர்கள் (சீனா) இறுதித் தீர்வுக்கான திட்டத்தை அளிப்பார்கள். அதன் மீது பேச்சுவார்த்தை நடக்கும் என்று கூறினார்.

ஆனால் பேச்சுவார்த்தை முடிந்து ஒரு வாரம் கூட ஆகவில்லை. இந்தியாவைப் துண்டு துண்டாகச் சிதறடிக்க வேண்டும் என்று சீன அரசு ஆதரவு இணையத் தளத்தில் கட்டுரை வந்தது.

இதுநாள் வரை அருணாசலப் பிரதேசத்தின் ஒரு மாவட்டத்தை (துவாங்) மட்டும் கேட்டுக்கொண்டிருந்த சீன அரசு இப்போது அருணாசல பிரதேச மாநிலமே எங்களுடையது என்று கேட்கிறது!. அங்குள்ள மக்கள் தேர்தலில் வாக்களித்து தேர்வு செய்ய முதலமைச்சர் அதற்கு மறுப்புத் தெரிவிக்கிறார்.

அந்த மாநிலத்தில் நிறைவேற்றப்படும் திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் அளிப் பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறது சீன அரசு. 13 சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தி எட்டிய சுமுக நிலை இவ்வளவு தான்!

இது தான் 5 ஆண்டிற்கு மேலாக இந்திய நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருக்கும் எம்.கே. நாராயணனின் சாதனை. இந்திய நாட்டிற்கு ஆதரவாக என்றென்றும் திகழ்ந்த ஈழத் தமிழ் மக்களை கொன்று குவிக்க ராஜபக்ஷ கம்பனிக்கு உதவி அந்நாடு இன்று சீனத்தின் வலிமையாக கூட்டாளியாகி விட்டது.

இந்து மகா சமுத்திரத்தில் தனது வல்லாண்மையை நிலை நாட்ட அம்பாந்தோட்டையில் துறைமுகம் நிறுவிக்கொள்ள சீனாவிற்கு இடமளித்துள்ளது. இலங்கை அரசு இதன்மூலம் இந்தியாவின் தென் முனை கடல் வழியில் தனது மேலாதிக்கத்தை வலிமையாக நிறுவப்போகிறது சீனா.

இதனால் அச்சமுற்ற இந்தியா மாலை தீவில் தனது கடற்படைத் தளத்தை நிறுவும் முயற்சியில் அவசர அவசரமாக ஈடுபட்டு வருகிறது.

இந்த ராஜதந்திர புலிகளின் சாமர்த்தியத்தால் சீனா வலிமையாக கால் பதித்துவிட்டது. விடுதலைப்புலிகளையும் ஈழத்தமிழ் மக்களையும் கொன்றொழித்து இந்தியா கண்ட பலம் இது தான்.

இந்திய நிறுவனங்கள் சிலவற்றிற்கு வணிக வாய்ப்புக்கள் கிடைத்ததைத் தவிர, இலங்கைக்கான வெளியுறவுக் கொள்கையில் இந்தியாவிற்கு வேறு என்ன கிடைத்தது? தமிழர்களை விரோதித்துக் கொண்டது தான் மிச்சம் !

தங்களுடைய இரகசியத் திட்டங்களை மறைத்துக்கொள்ள இவர்கள் எப்போதும் ஊதி விடும் புகை தான் விடுதலைப்புலிகளால் அச்சுறுத்தல் என்பது இது நாள் வரை இவர்கள் மேற்கொண்ட இராஜதந்திரக் கூத்துக்களின் பலன்களை இந்தியா அனுபவிக்கும் காலம் நெருங்குகிறது. அப்போது தெரியும். இவர்கள் எந்த நாட்டின் பாதுகாப்பு ஆலோசகர்கள் என்று.

*தமிழகத்திலிருந்து தமிழன்*

# வடக்கு மாகாண விளையாட்டு விழா-2009

## 10 ஆயிரம் மீற்றரில் வவு.வீரருக்கும் 800 மீற்றரில் யாழ்.வீரருக்கும் தங்கம்



800 மீற்றர் ஓட்டத்தில் வெற்றி பெற்ற வீரர்கள்

வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் 800 மீற்றர் ஓட்டத்தில் ஆண்கள்பிரிவில்யாழ்.மாவட்ட வீரரும்பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட வீராங்கனையும் தங்கம் வென்றனர்.

வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் நேற்று துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற 800 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட வீரர் பி.நேசரூபன் 2 நிமிடங்கள் 4 செக்கன்கள் 4 விநாடிகளில் தூரத்தைக் கடந்து முதலாம் இடத்தைப் பிடித்து தங்கப்பதக்கத்தைப் பெற்றார்.

இதில் மன்னார் மாவட்ட வீரர் வி.யோகேஸ்வரன் 2 நிமிடங்கள் 6 செக்கன்கள் 3 விநாடிகளில் ஓடி வெண்கலப் பதக்கத்தையும் வவுனியா வீரர் என்.சிவநேசன் 2 நிமிடங்கள் 6 செக்கன்கள் 7 விநாடிகளில் தூரத்தைக் கடந்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

தொடர்ந்து நடைபெற்ற 800 மீற்றர் ஓட்டப்போட்டி பெண்கள் பிரிவில்வவுனியா மாவட்ட வீராங்கனை பி.கல்பனா 2 நிமிடங்கள் 38 செக்கன் 9 விநாடிகளில் போட்டித் தூரத்தை எட்டி முதலாமிடத்தைப் பிடித்து தங்கப்பதக்கத்தை பெற்றார்.

இதில் யாழ்.மாவட்ட வீராங்கனை ஆர்.காவேரி 2 நிமிடங்கள் 47 செக்கன்கள் 4 விநாடிகளில் தூரத்தைக் கடந்து வெள்ளிப்பதக்கத்தையும் மற்றொரு யாழ்.மாவட்ட வீராங்கனை ஆர். அனுஷியா 2 நிமிடங்கள் 53 செக்கன்கள் 2 விநாடிகளில் ஓடி வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் நேற்று நடைபெற்ற 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட வீரர் சசிகரன் 36 நிமிடங்கள் 04 செக்கன்கள் 3 விநாடிகளில் போட்டித் தூரத்தைக் கடந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

இதில் மன்னார் மாவட்ட வீரர் ரி.அந்தோனி 36 நிமிடங்கள் 24 செக்கன்கள் 8 விநாடிகளில் தூரத்தை எட்டி வெள்ளிப் பதக்கத்தையும் வவுனியா மாவட்ட வீரர் என்.ஜி.இ. எஸ். ஜெயதிலக 36 நிமிடங்கள் 54 செக் கன்கள் 8 விநாடிகளில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

தொடர்ந்து நடைபெற்ற 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டியில் பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட வீராங்கனை ஈ.எம்.சி.எல். ஹேரத் 47 நிமிடங்கள் 40 செக்கன்களில் தூரத்தைக் கடந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

இதில் யாழ்.மாவட்ட வீராங்கனை எல்.மேர்ஷி 47 நிமிடங்கள் 4 செக்கன்கள் 52 விநாடிகளில் தூரத்தைக் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும் வவுனியா மாவட்ட வீராங்கனை 49 நிமிடங்கள் 49 செக்கன்கள் 6 விநாடிகளில் ஓடி முடித்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

### குண்டெறிதலில் யாழ்.வீரருக்கு தங்கம்

குண்டெறிதல் ஆண்கள் பிரிவில் யாழ். மாவட்ட வீரர்கள் தங்கம், வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.

வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற குண்டெறிதல் ஆண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட வீரர் எஸ்.வாகிசன் முதலிடத்தைப் பிடித்து தங்கப்பதக்கத்தை பெற்றார்.

யாழ்.மாவட்ட வீரர் எம்.பிரதீப்குமார் இரண்டாம் இடத்தைப் பிடித்து வெள்ளிப்பதக்கத்தையும் வவுனியா மாவட்ட வீரர் றீகன் மூன்றாமிடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

### வவுனியா வீராங்கனைக்கு தட்டெறிதலில் தங்கம்



தட்டெறிதலில் பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட வீராங்கனை ரி.அனுஷா தங்கப் பதக்கம் வென்று சாதித்தார்.

வட மாகாண விளையாட்டு விழாவில் நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங் கில் நடைபெற்ற தட்டெறிதல் பெண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட வீராங்கனை ரி. அனுஷா 40.77 மீற்றர் தூரத்திற்கு எறிந்து தங்கப் பதக்கம் வென்றார்.

யாழ்.மாவட்ட வீராங்கனை எஸ். கீர்த்திகா 23.25 மீற்றர் தூரம் எறிந்து இரண்டாமிடத்தை பிடித்து வெள்ளிப் பதக்கத்தையும்,வவுனியா மாவட்ட வீராங்கனை ரி.புகீர்த்தா 19.25 மீற்றர் தூரம் எறிந்து மூன்றாமிடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

## யாழ்.மாவட்ட அணி கரபந்தாட்டத்தில் சம்பியன்



கரபந்தாட்டப் போட்டியில் வவுனியா மாவட்ட அணியை வீழ்த்தி யாழ். மாவட்ட அணி வட மாகாண சம்பியனானது.

வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் நேற்று துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற கரபந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம், வவுனியா மாவட்ட அணிகள் மோதின.

இதில் யாழ்.மாவட்ட அணி 25:16, 25:08, 25:22 என்ற கணக்கில் வவுனியா மாவட்ட அணியை வீழ்த்தி சம்பியனானது.

## பெண்கள் மென்பந்து கிரிக்கெட் வவுனியா மாவட்ட அணி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் வவுனியா பெண்கள் அணி 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

வடக்கு மாகாண முதலாவது விளையாட்டு விழா யாழ்.துரையப்பா விளையாட்டரங்கு, யாழ்.மத்திய கல்லூரி மைதானங்களில் நடை பெற்று வருகின்றது.

இதில் நேற்று யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் வவுனியா, மன்னார் மாவட்ட பெண்கள் அணிகள் மோதின.

இப் போட்டியில் இரு அணிகளுக்கும் தலா 5 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் மாவட்ட பெண்கள் கிரிக்கெட் அணி நிர்ணயிக்கப்பட்ட 5 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களையிழந்து 50 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரெபேக்கா 20 ஓட்டங்களை அதிகபட்சமாக எடுத்தார். பந்து வீச்சில் வவுனியா மாவட்ட அணிசார்பாக பாஸ்கினா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 5 ஓவர்களில் 51 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட பெண்கள் கிரிக்கெட் அணி 3.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 51 ஓட்டங்களை எடுத்து 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் பாஸ்கினா ஆட்டமிழக்காமல் 19 ஓட்டங்களை எடுத்தார். இவ் வெற்றியின் மூலம் வவுனியா மாவட்ட பெண்கள் கிரிக்கெட் அணி வடக்கு மாகாண சம்பியனானது.

## வலைபந்தாட்டத்தில் யாழ்.அணி சம்பியனானது



வலைபந்தாட்டத்தில் யாழ்.மாவட்ட அணி மன்னார் மாவட்ட அணியை வீழ்த்தி சம்பியனானது.வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் நேற்று துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றவலைபந்தாட்ட இறுதிப்போட்டியில் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட அணிகள் மோதின.

இதில் யாழ்.மாவட்ட அணி 56:11 என்ற கணக்கில் மன்னார் மாவட்ட அணியை வீழ்த்தி வடக்கு மாகாண சம்பியனானது. (5,7)

## பெண்கள் கரபந்தாட்டத்தில் யாழ்.மாவட்ட அணி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கான கரபந்தாட்ட போட்டியில் யாழ்.மாவட்ட அணி சம்பியனானது. வடக்கு மாகாண விளையாட்டு விழாவில் நேற்று துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற பெண்களுக்கான கரபந்தாட்ட போட்டியில் யாழ்ப்பாணம், வ்வுனியா மாவட்ட பெண்கள் அணிகள் மோதின.

இதில் யாழ்.மாவட்ட பெண்கள் அணி ஆரம்பம் முதலே சிறப்பாக விளையாடி 25:12, 25:13, 25:16 என்ற கணக்கில் வவுனியா மாவட்ட பெண்கள் அணியை வீழ்த்தி சம்பியனானது.

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்



# மனித உரிமை மீறல்களை கண்டறிய...

உண்மையைக் கண்டறியும் விசாரணை ஒன்று நாடு முழுவதும் நடத்தப்பட வேண்டும் என்றும் பதில் கூறும் பொறுப்பு இலங்கை அரசுக்கு இருக்கின்றது என்றும் தாம் கருதுவதாக ஐ.நா. நேற்று சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஐ.நா.வின் அரசியல் பொதுச் செயலாளர் லின் பாஸ்கோவின் இலங்கைப் பயணத்தின் போது ஐ.நாவின் உறுதியான இந்த நிலைப்பாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கொழும்பில் இருந்து புறப்பட்ட பின்னர் வெளியிடப்பட்ட இந்த அறிக்கை கூறுகின்றது.

உண்மையைக் கண்டறிவது தொடர்பான அந்த நடவடிக்கைகள் சுயாதீனமாகவும் பக்க சார்பற்ற விதத்திலும் அமைந்திருப்பது அவசியம் என பாஸ்கோவே ஜனாதிபதியிடம் கண்டிப்பாக வலியுறுத்தி இருக்கின்றார்.

போரின்போது பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் அதுகுறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் தலைமையிலான அனைத்துலக சமூகத்தின் ஒரு பகுதி தொடர்ச்சியாக கோரி வருகின்றது.

ஆனால் போரில் ஒரு பொதுமகன் கூட படையினரால் கொல்லப்படவில்லை என்று கூறி அந்தக் குற்றச்சாட்டுக்களை அரசு மறுத்து வருகின்றது.

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பிரேரணையைக் கூட அண்மையில் சீனா, ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளின் உதவியுடன் இலங்கை தோற்கடித்திருந்தது.

கடந்த காலத்துடன் மோதுவது சிக்கலானது எனத் தெரிவிக்கும் ஐ.நா. அறிக்கை, விடயங்களைக் கிளறுவது சினமூட்டுவதாக இருந்தாலும் பிற்காலத்திற்கு அது மிகப் பெறுமதி வாய்ந்ததாக இருக்கும் எனவும் கூறி உள்ளது.

இனங்களுக்கு இடையிலான கருத்து இணக்கம் இலங்கையின் எதிர்காலத்திற்கு மிக முக்கியமானது எனவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. உலகில் பல இடங்களில் மோதல்களின் பின்னரான நிலைமைகளை ஐ.நா. கையாண்டுள்ளது.

பதில் கூறக் கடமைப்பட்டுள்ள பிரச்சினைகளைக் கையாள்வதற்கான வழிவகைகளை தேடுவது, அமைதியை ஏற்படுத்துவதற்கும் முன்நோக்கி நகர்வதற்கும் அவசியமாக இருந்துள்ளது என்பதையும் தெரிந்து வைத்துள்ளது என அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர் முடிந்ததாக அரசு அறிவித்த போது, இறுதிக்கட்ட மோதல்களின் போது சுமார் 7 ஆயிரம் பொதுமக்கள் உயிரிழந்தனர் என ஐ.நா. கணக்கிட்டிருந்தது. (எ-1)

## தமிழ்மொழி முகாம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட தரம் 8 மாணவர்களுக்கான தமிழ் மொழி முகாம் நாளையும் எதிர்வரும் 23 ஆம் திகதியும் காலை 8.30 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என வலயக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச)

## மனித உரி...

பசில் ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசுவார் எனத் தெரிகிறது.ஐ.நா.பிரதிநிதி எதிர்வரும் 23ஆம் திகதி பயணம் மேற்கொள்ளுவார் என்று தெரிவிக்கப்பட்ட போதும் அது இன்னும் சரியாக உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. (ச-5)

## சனல்-4...

தவறானது எனத் தெரிவித்து மன்னிப்புக் கோர வேண்டும் என சனல்-4 நிறுவனத்துக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மனுவை தாக்கல் செய்வதற்கு முன்னதாக சட்டவாளர்களை சந்தித்து ஆலோசனை நடத்துவதற்காகவே மொஹான் பீரிஸ் லண்டன் சென்றுள்ளார் என கூறப்பட்டுள்ளது. (ச-5)

## பல்கலைக்கழக மாணவர்கள்...

நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த தீவகத்தைச் சேர்ந்த 500 பேர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

இம் மக்கள் அந்தந்த பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர். அத்துடன் யாழ்.பல்கலைக்கழக மாண வர்கள் 34 பேரும் நேற்று வவுனியா நலன்புரி முகாமில் இருந்து அழைத்து வரப்பட்டு யாழ்.பல்கலைக்கழகத்தைடி விடுதியில் தங் கவைக்கப்பட்டுள்ளனர் என்றார். (ச-5)

## ராஜீவ் கொலைக் குற்றவாளி...

தடுத்துவைக்கப் பட்டிருக்கின்ற தன்னைத் தனது குடும்பநலனைக் கருத்தில் கொண்டு விடுவிக்குமாறு தமிழக முதல்வர் கருணாநிதிக்கு மனு ஒன்றையும் அவர் அனுப்பிவைத்துள்ளார். விடுவிக்க முடியாத பட்சத்தில் தம்மைக் கருணைக் கொலைக்கு உட்படுத்துமாறும் அவர் மனுவில் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமது உணர்வுகளைக் கொன்று குடும்ப உறுப்பினர்களிடமிருந்து ஒதுக்கப்பட்டு வாழ்வதை விட அன்றாடம் நிகழும் மரணங்களைப் போல தன்னையும் ஒரு முறை இறக்கவிடுங்கள் என அவர் அந்த மனுவில் கோரியுள்ளார். (ச-5)

## கப்டன்...

தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த போது காலமானதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான இவர் வன பரிபாலன இலாகாவில் பணிபுரிந்து ஓய்வுபெற்றவராவர்.

உதைபந்தாட்டத்தில் விற்பன்னரான இவர் உதைபந்தாட்டச் சங்கங்களில் நீண்ட காலமாக முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

இவரது உதைபந்தாட்ட திறமைக்காக இலங்கையின் அதியுயர் தேசிய விருது வழங்கப்பட்டது. இவர் உதைபந்தாட்டம் மற்றும் கரபந்தாட்டங்களில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட போட்டிகளில் நடுவராகக்கடமையாற்றியுள்ளார்.

அத்துடன் வலம்புரியில் நீண்ட காலமாக குரு நகர்ச் செய்தியாளராகவும் பணிபுரிந்துள்ளார். (ச)

வாடிக்கையாளர்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!
DCP 650


பற்றரியுடன் 2 வருட உத்தரவாதத்துடன் DCP UPS
3 வருட உத்தரவாதத்துடன் D-link Broad Band, ADSL Routers
30 செக்கன்களில் 4R Photo Print செய்யக்கூடிய Printers
மற்றும் அனைத்துவகையான Epson Printer வகைகளுக்கும்
சிறிய வகையான LAP TOP (Note Book)
குறைந்த விலை, போலி உத்தரவாதம், என்பவற்றிற்கு ஏமாறாதீர்கள்
உறுதியான உத்தரவாதத்தினை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்ள எம்முடன் இணையுங்கள்
PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD.
305, Kasthuriyar Road, Jaffna.
T.P :- 021 222 1101
MARSHA SYSTEMS (PVT) LTD
74, Kasthuriyar Road, Jaffna.
T.P :- 021 222 9418
Debug
Authorized Distributor in Jaffna
இன்றே நாடுங்கள்
(C-3345)
Thirumurugan Comnet T.P: 0777554528
259, K.K.S. Road, Jaffna. (ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

புதிய நிறுவனம் ஆரம்பம்
பதிவுகளை 21 09 2009 முன்னர் செய்யுங்கள்
Diploma Courses...
*MS Office *Computerised Accounting
*DTP,Hardware *Web Developing*English
* Video Editing * AutoCAD * VB.net,LINUX
International Courses...
MCP_Microsoft Certified Professional
MCSE_Microsoft Engineer,CIMA,IELTS
Sun Java programmer,Cisco-CCNA,ICDL
Degree Course * BIT Semester 1,3 & 5,Project
மேலதிக விபரங்களுக்கு நேரில்
324, பலாலி வீதி,யாழ்ப்பாணம்
பரமேஸ்வரா சந்தி அருகில், MCS
Bus Route - 764 0772395895
Supported By UNDP/JRRP

LAVA HOSPITAL
75, கோயில் வீதி (I.C.R.C. சந்தி அருகில்),
யாழ்ப்பாணம். T.P. :- 021 222 4333
SCAN, ECG மற்றும் இரத்த, சல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும்.
அடிப்படை உடற்பரிசோதனைகள்.
உடல் பருமனுள்ளவர்களைப் பரிசோதிப்பதற்கான
'OBESITY' PACKAGE Rs. 1200 /=
(C-3344)

YOUR FUTURE
ACCA
IN FINANCE AND ACCOUNTING
Association of Charted Certified Accountants
☆ கணக்கியலிலும், நிதித்துறையிலும் ஐக்கிய இராச்சிய பட்டத்தையும் உள்ளூர்,சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தகுதியையும் வழங்குகின்றது.
☆ க.பொ.த. (உ/த) இரண்டு பாடத் தகுதிகள் or 21 வயதிற்கு மேற்பட்டவர்கள் இணைந்து கொள்ளலாம்.
☆ பட்டதாரிகளுக்கு முழுமையான பாட விலக்களிப்புகளுடன் UK செல்வதற்கான விசா ஒழுங்குகள்.
☆ புதிய மாணவர்களுக்கான பதிவுகள் சனி ,ஞாயிறு தினங்களில் நிறுவனத்தில் நடைபெறுகின்றன.
☆ விரிவுரைகள் வார, வார இறுதி நாட்களில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
☆ British Council இன் அனுமதியுடன் யாழ்.நகரில் பரீட்சைகள்
BUSINESS PARTNER:MERCURY
Jaffna Technical Institute(JTI)
இல.45 ,மணிக்கூட்டு வீதி ,யாழ்ப்பாணம்.
T.P.:0777855800, E-Mail:accajaffna@gmail.com
(C-3337)

Jaffna Technical Institute(JTI)
No. 45, Clock Tower Road, Jaffna.
(பெருமாள் கோவிலுக்கு அருகாமையில்)
பிரிவு II
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING (DCA)
ACCOUNT EXPRESS + TALLY ACCOUNTING
QUICK BOOKS + ASSET MANAGER + PEACHTREE
வார நாட்கள் : 7.00- 8.00 A.M
வார இறுதி நாட்கள்: 10.00- 11.00 A.M, 2.00- 3.00 P.M
பதிவுகள் வார இறுதி நாட்களில் மேற்கொள்ளப்படுகின்றன
பதிவுக் கட்டணம் இலவசம்
(C-3338)

யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
FedEx Express
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
குறைந்த கட்டணத்திலான உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
இப்பொழுது ! வாடிக்கையாளரின் நலன்கருதி வடமராட்சியிலும்
பிரதான வீதி நெல்லியடி
ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்
லண்டன், சுவிஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத பொதிகளிற்கு 1Kg 550/=ரூபா வீதமும். கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 550/= ரூபா வரையான விசேட சலுகை
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.
(C-3346)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.